Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dialog டயலொக்

kit

எந்நேரமும் என்னுடன்....

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 13 ஹிஜ்ரி 1427 ஸபர் 26 (27.03.2006) திங்கட்கிழமை இதழ் 177

# சமாதான முயற்சியிலிருந்து விலக அரசும் புலிகளுமே கோரவேண்டும்

## ஜே.வி.பி., ஹெல உறுமயவுக்கு நோர்வே பதிலடி

கொழும்பு —

அரசும் விடுதலைப் புலிகளும் கேட்டுக்கொண்டால் மாத்திரமே இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியிலிருந்து நோர்வே வெளியேறும் என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வே பக்கச்சார்பாக நடப்பதாகவும், விடுதலைப் புலிகளுக்கு தனித் தமிழீழத்தைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதாகவும் சிங்கள இனவாதக் கட்சிகளான ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் குற்றம்சாட்டுவது தொடர்பாகவும் -

நோர்வேயை அமைதி முயற்சியிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வெளியேற்றவேண்டும் என்றும் கோரிவருவது பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே ஒஸ்லோ வட்டாரங்கள் இவ்வாறு குறிப்பிட்டன.

பல்வேறு நாடுகளின் நீண்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆத்திரமூட்டும் சம்பவங்களை தவிர்த்து பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்

### இருதரப்புக்கும் கண்காணிப்புக்குழு வேண்டுகோள்

கொழும்பு —

அரசும் விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையை உரியமுறையில் பாதுகாக்கவேண்டும். இதனை விடுத்து ஆத்திரமூட்டும் சம்பவங்களில் ஈடுபட்டால், கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் இடம்பெற்றது போன்று வன்முறைச் சம்பவங்கள் நிகழலாம் என கண்காணிப்புக் குழுவினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கற்பிட்டி கடலில் கடற்படையினரின் டோறாப் படகு வெடித்துச் சிதறிய சம்பவம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் -

மீன்பிடிப்படகு வெடித்துச் சிதறியதால் கடற்படையின் டோறாப் படகு மூழ்கியதில் 8 கடற்படையினர் உயிரிழந்தனர்.

ஜெனீவாவில் பேச்சுக்களை நடத்த அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட பின்னர் இடம்பெற்ற மிக மோசமான சம்பவம் இதுவாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தம் புதிய டோறாவே கற்பிட்டியில் மூழ்கியது!

கொழும்பு —

கற்பிட்டிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மீன்பிடிப்படகு ஒன்றை வழிமறித்து சோதனையிட முற்பட்டபோது, வெடித்துச் சிதறிய கடற்படைப்படகு டொக்யார்ட் நிறுவனத்தால் கட்டப்பட்ட புத்தம் புதிய படகு எனத் தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை ஆழ்கடலிலிருந்து



டொக்யார்ட் தயாரிப்பான அல்ட்ரா III அதிவேகத் தாக்குதல் படகு.

## காணாமற்போன படையினரை தேடும் முயற்சிகள் தோல்வி!

கொழும்பு —

கற்பிட்டி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் சந்தேகத்துக்கிடமான மீன்பிடிப்படகை சோதனையிட முற்பட்டபோது - வெடித்துச் சிதறி கடலில் மூழ்கிய கடற்படைப் படகில் இருந்த எட்டு கடற்படையினரையும் தேடும் முயற்சிகள் தோல்வி கண்டிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு

கற்பிட்டிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மீன்பிடிப்படகு ஒன்றை வழிமறித்து சோதனையிட முற்பட்டபோது, வெடித்துச் சிதறிய கடற்படைப்படகு டொக்யார்ட் நிறுவனத்தால் கட்டப்பட்ட புத்தம் புதிய படகு எனத் தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை ஆழ்கடலிலிருந்து ட்ரோலர்கள் மூலம் ஆயுதங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவல்களை அடுத்து கடற்படையினரால் - ஜயசாகர என்ற பீரங்கிப் படகின் தலைமையில் இரண்டு அதிவேகத் தாக்குதல் படகுகள் தேடுதலுக்காக அனுப்பப்பட்டிருந்தன.

இன்னொரு டோறாப்படகுடன் சென்றபோதே P431 இலக்க அதிவேக தாக்குதல் படகு கற்பிட்டிக் கடற்பரப்பில் குறித்த மீன்பிடிப் படகை எதிர்கொண்டது. மீன்பிடிப்படகை நிறுத்துமாறு(12 ஆம் பக்கம் பார்க்க)



டொக்யார்ட் தயாரிப்பான அல்ட்ரா III அதிவேகத் தாக்குதல் படகு.

கொழும்பு

கற்பிட்டி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் சந்தேகத்துக்கிடமான மீன்பிடிப்படகை சோதனையிட முற்பட்டபோது - வெடித்துச் சிதறி கடலில் மூழ்கிய கடற்படைப் படகில் இருந்த எட்டு கடற்படையினரையும் தேடும் முயற்சிகள் தோல்வி கண்டிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கற்பிட்டி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மாலை முதல் கடற்படை பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. ஆனாலும், கடலில் மூழ்கிய கடற்படைப் படகின் சிதைவுகளைத் தவிர வேறெதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

காணாமற்போன கடற்படையினரோ அல்லது அவர்களின் சடலங்களோ அகப்படவில்லை என கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க தெரிவித்தார்.

மூழ்கிய கடற்படைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்பு!

யாழ்ப்பாணம்

யாழ்.தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற நாட்டுப்பற்றாளர் அன்னைபூபதியின் நினைவுநாள் நிகழ்வை குழப்பியமை, மாணவர்கள் விரிவுரையாளர்கள் தாக்கப்பட்டமை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை பகிஷ்கரிக்க யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்குப் பின்னரேயே பரீட்சைப் பெறுபேறுகள்!

கொழும்பு

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் இந்தமாதம் வெளியிடப்படமாட்டாது என்றும் -

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரே வெளியிடப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தமாதம் கடைசி வாரத்தில் சாதாரண தரப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் படைப் பிரிவு; கிழக்கில் ஆட்சேர்ப்பு!

கொழும்பு

இலங்கை இராணுவத்தில் முஸ்லிம் படைப்பிரிவு ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன் இதற்கான ஆட்சேர்ப்பும் இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்
(12 ஆம் பக்கம் பார்க்க)

### இன்றைய இதழில்

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வி.பார்த்திபனின் பௌதிகவியல் மாதிரி வினாத்தாள் வெளிவருகிறது.

### ஆயுதக் குழுக்கள் குறித்த

## கண்காணிப்புக்குழு அறிக்கை; ராணுவ பேச்சாளர் கண்டனம்!

கொழும்பு

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதக் குழுக்கள் இயங்குவதாகவும் - இவர்களின் ஆயுதங்களைக் களைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கை குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கண்டனம் தெரிவித்தார்.

இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க பி.பி.சிக்கு நேற்றிரவு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. ஆதாரம் இருந்தால் எங்களிடம் காட்டலாம். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுக்களை படையினர் ஒருபோதும் ஆதரித்ததில்லை. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் முகாம்கள் ஏதும் கிடையாது.

சட்டத்துக்குப் புறம்பாக ஆயுதங்
(12 ஆம் பக்கம் பார்க்க)



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்.....
EXPOAIR
021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...


# இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால் வேலையில்லா பிரச்சினையை தீர்க்கலாம்

## யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

இளைஞர், யுவதிகள் கிராமங்களை மையமாக வைத்து விவசாயத்தில் நாட்டம் காட்டுவார்களாயின் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதோடு, எமது பிரதேசமும் துரிதகதியில் அபிவிருத்தி அடையும் என யாழ். மாவட்ட நீதிவான் இ.த விக்னராஜா தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்க சமாச மகளிர் தின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

நானும் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவன். எனது தந்தையும் ஒரு விவசாயி. முன்பு கல்வி கற்ற மாணவர்களும் விவசாயத்தில் ஈடுபட்டு இன்று நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் உ யர் பதவியில் இருக்கின்றனர்.

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் கிராமிய வாழ்க்கை முறை முற்றாக மாறிவிட்டது. இளைஞர், யுவதிகள் விவசாயத்தில் ஈடுபடாவிட்டால் நாம் பொருளாதார ஸ்திரதன்மையை அடைய முடியாது.

வெளிநாட்டுக்கு சென்ற எமது இளைஞர், யுவதிகள் - அவரவர் தகைமைக்கு ஏற்ற தொழிலைச் செய்யவில்லை. இங்கு எந்தத் தொழிலை செய்ய இளைஞர், யுவதிகள் தயங்குகின்றார்களோ அந்தத் தொழிலைத் தான் வெளிநாடுகளில் உள்ளவர்கள் செய்கிறார்கள்.

சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் கூட்டுச் சேர்ந்து திட்டங்கள் மூலம் கிடைக்கும் பணத்தை சிறப்பான முறையில் பயன்படுத்த முற்பட்டால் கிராமிய மக்களின் பொருளாதாரமும் வளர்ச்சியடையும்.

எனவே - இளைஞர், யுவதிகள் இந்தச் சங்கங்களில் இணைந்து செயற்பட்டால் வேலையில்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும்.

இன்று எமது பிரதேசத்தில் கலாசார சீர்கேடுகள் தொடர்பான வழக்குகள் பெருமளவில் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. இவ்வாறான கலாசார சீர்கேடுகளுக்கு வேலையில்லாப்பிரச்சினையும் ஒரு காரணமாகும்.

இன்று வெளிநாட்டு நிறுவனங்கள் பல எமது பிரதேசத்தில் முதலீடு செய்யவும் கடன் வழங்கவும் தயாராக இருக்கின்றன. இத்தகைய நிறுவனங்களை அணுகி, கூட்டுறவுச் சங்கங்கள் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அந்த நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் நாம் பொருளாதார முன்னேற் றத்தை அடைய முடியும் என யாழ். மாவட்ட நீதவான் மேலும் தெரிவித்தார். (ரி)

## விபத்தில் சிறுவன் காயம்

மானிப்பாய் —


மானிப்பாய் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற மாணவனான மானிப்பாயைச் சேர்ந்த ஜெயராம சர்மா ஸ்ரீராம் (வயது 13) தலையிலும் காலிலும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (110)



தென்மராட்சி பிரதேச அனுசரணையுடன் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஓராண்டு தையல் மனையியல் டிப்ளோமா பயிற்சியை முடித்து வெளியேறும் மாணவிகளால் கைதடியில் நடத்தப்பட்ட கண்காட்சியின்போது தென்மராட்சி பிரதேச செயலர் மங்கள விளக்கேற்றுகிறார். (24)



வலி.தெற்குப் பிரதேச சபையின்உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் போது உள்ளூராட்சி வார சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப் பட்டது. பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கத்திடமிருந்து ஏழாலை சித்த வைத்தியர் சிவராஜா சிறப்பு பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். (101)



யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய மெய்வன்மைப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட என்.சிவரட்ணம் தம்பதிகள், உதவிப்பங்குத் தந்தை,அதிபர், உபஅதிபர் சகிதம் மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். (206)

# பங்குனி பொங்கல் உற்சவத்துக்கு வரும் பக்தர்கள் தங்க நகைகள் அதிகம் அணிவதைத் தவிர்க்கவும்!

## பன்றித்தலைச்சி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள்!

மட்டுவில் —

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனி திங்கள் உற்சவத்துக்கு வரும் அடியார்கள் தங்க நகைகளை பெருமளவில் அணிந்துவருவதைத் தவிர்க்குமாறு ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினரால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மட்டுவில் - பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் இரண்டாவது நாளான இன்று பெருமளவான பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சனநெரிசலைப் பயன்படுத்தி திருட்டுச் சம்பவங்கள் அதிகரிக்கக்கூடும். எனவே பெண்கள், சிறுவர்கள் பெருமளவில் நகை அணிந்து வருவதைத் தவிர்த்துக்கொவதுடன், தேவைக்கு அதிகமாக பணம் கொண்டு வருவதையும் தவிர்த்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

அத்துடன், சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு, பாதுகாப்பாக வைத்திருக்கும் வர்த்தகர்களிடம் தின் பண்டங்களை கொள்வனவு செய்வதோடு, சுகாதார சீர்கேடான முறையில் விற்பனை செய்யப்படும் தின் பண்டங்கள் குறித்து பொதுச் சுகாதார பரிசோதகருக்கு உடன் அறியத்தரும்படியும் கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருக்கயிலாய பரம்பரைத் தமிழகம் திருவாவடுதுறை ஆதீன குரு முதல்வர் அருள்திரு நமசிவாய மூர்த்திகள் பார்த்திப வருடத்தை அச்சுவினி மகரத் தலைநாள் குருபூசை விழாவையொட்டி 30.01.2006 இல் நடைபெற்ற சிறப்பு விருது வழங்கும் வைபவத்தில் திருவாவடுதுறை ஆதீன இருபத்துமூன்றாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகளால் அகில இலங்கைத் திருமுறை மன்ற தேவாரப்பண் ஆசிரியர் தேவார இசைமணி, கலாபூசணம் தாவடியூர் இராசையா திருஞானசம்பந்தனுக்கு தெய்வத் தமிழிசைச் செல்வர் என்னும் சிறப்பு விருது வழங்கி ஆசிகவசம் (பவுண்மோதிரம்) சூட்டி,பொன்னாடை போர்த்தி பொற்கிழியருளி வாழ்த்தி அருளாசி வழங்குவதைப் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி நகர அபிவிருத்தி சம்பந்தமாக சாவகச்சேரி பொது நல அமைப்புக்கள் மற்றும் கல்விமான்களை அண்மையில் நகர மேம்பாட்டு மண்டபத்தில் சந்தித்தபோது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உரையாற்றுவதையும் நகர சபைச் செயலர் திருமதி கு.ஆறுமுகம் மற்றும் பொதுநல அமைப்பு பிரதிநிதி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். 29)

# பெண்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் வாழ்க்கையில் முன்னேற்றம் காணலாம்!

## இசைத்துறைத் தலைவி பாக்கியலட்சுமி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

சுயதொழிலில் பெண்கள் ஈடுபட்டு சமூக பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும். உலக ரீதியாக பெண்கள் வளர்ந்து, சமுதாயத்தை முன்னேற்ற முன்வரவேண்டும். இளம் பெண்கள் ஆவல்,அக்கறை,அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் வாழக்கையில் முன்னேற முடியும் என யாழ். பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவர் பாக்கியலட்சுமி நடராசா தெரிவித்தார்.

அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாண கூட்டுறவுச்சபை மாவட்ட மகளிர் குழு நடத்திய 2006 அனைத்துலக பெண்கள்தின விழா, மனைப்பொருளியல் பொருட்காட்சி நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பெண்பிள்ளைகளுக்கான சுய தொழில் பயிற்சிகளை மகளிர் குழு வழங்கிவருகிறது. மகளிர் குழுவின் சேவை பாராட்டத்தக்கது. மகளிரால்களால் தயாரிக்கப்படும் பொருட்களை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுப்பதுடன் மாதிரி விற்பனை நிலையம் ஒன்றையும் மாவட்டக் கூட்டுறவுச் சபை அமைத்துக் கொடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தலைமையுரையைத் தொடர்ந்து யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். (21)


DAIDO Mopet
48CC
Koyo
ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO
ஏகமுகவர்
செரன்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341580-1, 2438770,
பக்ஸ் 011-2454605
E.mail: zme@slt.lk


## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

எனது பாடப்புத்தகங்களும் குறிப்புக்களும் அடங்கிய ஒரு கையடக்க கறுப்புப் பை கந்தர்மடத்துக்கும் முடமாவடி பாதையூடாக இருபாலை சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் -

த.ந.பஞ்சாட்சரம், ஆங்கில ஆசிரியர், நீர்வேலி மத்தி (077-9002304) என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

சன்மானம் வழங்கப்படும். (2229)

### விற்பனைக்கு

இணுவில் லக்ஷ்மி தியேட்டருக்கு முன்பாக 22 பரப்பு தோட்டக்காணி கே.கே.எஸ் றோட்டுடன் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்கு உண்டு.

அத்துடன் பலாலி றோட்டில் இலுப்பையடிச் சந்திக்கு அருகில் 41/2 பரப்புக்கு சற்றுக்குறைவாக வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொலைபேசி: 077-3527006

(2228)



நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் புகழ் ரவி, கம்னா,
பிரகாஸ் ராஜ் நடித்த
இதயத்திருடன்
கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00

மனோகரா யாழ்ப்பாணம்
புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் அஷிமா மற்றும் பலர் நடித்த
சுதேசி
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந்,
மீராஜஸ்மின்
நடித்த
மெர்குரிப்பூக்கள்
பு. நேரம் : 10.30,2.00, 6.00,9.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
விஷால், மீரா ஜஸ்மின்
நடித்த
சண்டைக் கோழி
கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

# புலிகள் அமைப்பில் இணையவந்த இரு சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு



திருகோணமலை—

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையவந்த இரு சிறுவர்கள் நேற்றுமுன்தினம் மாலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் முன்னிலையில் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தில் புதிதாகச் சிறுவர்களைச் சேர்த்து, ஆயுதப் பயிற்சிகளை வழங்குகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு தொடர்ந்தும் அரச படைகளாலும், அரசியல்வாதிகளாலும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட்டபோதும் விடுதலைப் புலிகள் வயதுகுறைந்த சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்றிக்சன் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. எழிலனைச் சந்தித்தபோது இவ்விரு சிறுவர்களையும் புலிகள் ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலிகள் படையணியில் சிறுவர்களைச் சேர்ப்பது குறைந்துள்ளது என அண்மைக்காலத்தில் ஐக்கிய நாடுகளின் யுனிசெவ் நிறுவனம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

# மங்களவை பிரதமராக்க இரகசியமாகத் திட்டம்!



கொழும்பு—

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை ஜே.வி.பி விலக்கிக்கொண்டால் - வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவை நாடாளுமன்றத்தினூடாக பிரதமராக்குவதற்கான இரகசிய திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவித்தது.

இந்தத் திட்டத்தின்படி அமைச்சர் மங்கள சமரவீரவை ஸ்திரப்படுத்தும் வகையில் விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதன்படி மங்கள சமரவீர இனத்துக்காகத் தோன்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரே தலைவரென மக்களுக்கு விளக்கும் வகையில் இந்த செயற்திட்டத்தில் இணைந்துள்ள குழு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தினூடாக அமைச்சர் மங்கள சமரவீரவை பிரதமராக்குவதற்கு முன்னர் அவரது ஆற்றலை நாட்டில் பரந்தளவில் வெளிக்கொண்டுவரவேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இது குறித்த அனைத்து தகவல்களும் அடுத்த வாரம் வெளியாகலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (தே)

# 50 உள்ளூராட்சி சபைகள் ஜே.வி.பிக்கு கிடைக்குமாம்

கொழும்பு—

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 50இற்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் தமக்குக் கிடைக்குமென தாம் நடத்திய ஆய்வின்போது உறுதியாகியுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

19 மாவட்டங்களிலுள்ள 277 உள்ளூராட்சி சபைகளில் தமது கட்சி போட்டியிடுவதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது மூன்று உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் தமக்குக் கிடைக்குமென ஆய்வின் போது தெரியவந்துள்ளதாகவும் ஜே.வி.பியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த 277 உள்ளூராட்சி சபைகளுக்கும் வேறுவிதமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும், அதிகாரம் கிடைக்கும் உள்ளூராட்சி சபைகளை விட வேறு பல உள்ளூராட்சி சபைகளில் எதிர்க்கட்சியாக அமரும் வாய்ப்புக் கிடைக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# தேர்தல் முடிவு மறுநாள் அதிகாலையில்

கொழும்பு—

30 ஆம் திகதி நடைபெறவுள்ள எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முதலாவது முடிவு மறுநாள் 31 ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் வெளியிடப்படுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

கடுகன்னாவ, ஹப்புத்தளை போன்ற வாக்காளர் தொகை குறைவாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் முடிவுகளை முதலில் வழங்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு—

தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்படவேண்டியது அவசியமென - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து கொழும்பு ஊடகவியலாளர் மத்தியில் தயானந்த திஸநாயக்க தெரிவிக்கையில் -

தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் அவசியமானதாக உள்ளது. நடைமுறையில் உள்ள தேர்தல் முறையையும், முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட தேர்தல் முறையையும் இணைத்து புதிய தேர்தல் முறையை உருவாக்க வேண்டும்.

விருப்பு வாக்குமுறை இந்த நாட்டுக்குப் பொருத்தமானது அல்ல. உள்ளூராட்சித் தேர்தலுக்கு அது ஏற்புடையதும் அல்ல. இருப்பினும் சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிறிய கட்சிகள் இந்த விருப்பு வாக்குமுறையால் பயனடைகின்றன.

வேட்பாளர்கள் எவரும் கல்வித் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதில்லை. சொத்துப் பலம் மற்றும் காடைத்தனம் செய்வதுதான் இப்போது வேட்பாளர்களின் தகுதியாகிவிட்டது.

குற்றவாளிகள் பலர் இந்தநாட்டின் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். இத்தகையோரைத் தெரிவுசெய்து, இந்த நாட்டின் ஜனநாயகத்தைச் சீர்குலைப்பதை கட்சித் தலைவர்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வன்முறைகள் நடைபெற்றால் மறுதேர்தல் நடத்தமுடியாது. அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை.

261 உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்தல் நடைபெறும். வடக்கு - கிழக்கின் 46 சபைகள் உட்பட 69 இடங்களுக்கு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு தேர்தல் ஒத்திவைப்புக்கு நான் பொறுப்பல்ல. அந்தப் பிரதேச தெரிவத்தாட்சி அதிகாரிகள் அளித்த பரிந்துரையின் அடிப்படையிலேயே இந்தமுடிவு மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள சில பகுதிகளிலும், சில முஸ்லிம் பிரதேசங்களிலும் தேர்தல் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அனைத்து அமைச்சர்களுக்கும் இணைப்புச் செயலாளர்கள்!



கொழும்பு—

அனைத்து அமைச்சுக்களுக்கும் இணைப்புச் செயலாளர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இந்தப் பதவிக்கு நிர்வாகசேவையைச் சேர்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் - அதற்குத் தகுதியானவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அனுப்புமாறு ஜனாதிபதியின் செயலாளர் அலுவலகம், அனைத்து அமைச்சுக்களுக்கும் தெரிவித்துள்ளது.

அமைச்சுக்களுடன் நேரடியாக ஜனாதிபதி தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்குடன் நியமிக்கப்படும் இந்த இணைப்புச் செயலாளர்கள் தற்பொழுது சேவையிலீடுபட்டுள்ள அதிகாரிகளிடமிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவர்.

அமைச்சுக்கள்மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி அறிந்து கொள்வதற்காக இந்த இணைப்புச் செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன், இதன்மூலம் அமைச்சுக்களில் நிலவும் ஊழல்கள் மற்றும் முறைகேடான செயல்கள் போன்றவற்றைக் கண்காணிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (தே)

# அரசாங்கம் ஒதுக்கிய பணத்தில் பூங்கன்று வளர்க்கும் அமைச்சர்

கொழும்பு—

பிரபல அமைச்சரொருவர், தனது தனிப்பட்ட வீட்டில் பூங்கன்றுகளை வளர்ப்பதற்காக, தனது அதிகாரத்தின் கீழுள்ள அமைச்சுப் பணத்தில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவைச் செலவிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை அழகுபடுத்தவெனக் கூறி; அதற்குத் தேவையான தொகை அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு, தனது தனிப்பட்ட வீட்டில் நடுகை செய்வதற்காக, சண்பிளவர் லங்கா லிமிடட் என்ற தனியார் நிறுவனத்தில் பூங்கன்றுகளைப் பெற்றுக்கொண்டதாகவும் தெரியவந்துள்ளது. (தே)

# படையினரின் தாக்குதலைத் தடுப்பதற்கு தாக்குதல் நடத்தினால் பயங்கரவாதமா?

## எழிலன் கண்காணிப்புக் குழுவிடம் கேள்வி

திருகோணமலை—

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கிராமங்கள் மீது கடற்படைப்படகுகளில் இருந்து தாக்குதல் நடத்துபவர்கள் பயங்கரவாதிகளா?

அல்லது அந்தத் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்காகப் பதில் தாக்குதல் மேற்கொள்பவர்கள் பயங்கரவாதிகளா என திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் - இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினவின் புதிய தலைவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை தன்னை சந்தித்த இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தலைமையிலான குழுவினரிடமே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.




இராணுவத்தின் புதிய இணையத்தளத்தை கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கிவைத்த இராணுவ தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா அங்கு உரையாற்றும்போது - பயங்கரவாதிகளுடன் பேசுவதில் பயனில்லை என்று தெரிவித்திருந்தார்.

பேச்சுமேடையில் விடுதலைப் புலிகளுக்குச் சமனாக கலந்துகொள்ளும் இராணுவதரப்பினர் எம்மை பயங்கரவாதிகள் என தெரிவித்து வருகின்றனர். இவர்களால் எமக்கு என்ன தீர்வு கிடைக்கப்போகின்றது? என எழிலன் மேலும் தெரிவித்தார்.

# படையினரின் ஊழல்களை விசாரிக்க இராணுவ பொலிஸாருக்கு அதிகாரம்!

கொழும்பு—

இராணுவத்தில் நிலவும் ஊழல், மோசடி திருட்டு சம்பவங்களை விசாரித்தல் மற்றும் பரந்தளவிலான தேடுதல்களை மேற்கொள்ளும் வேலைத் திட்டம் இராணுவ பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவ பொலிஸாருக்கு வழங்கிய ஆணைக்கு அமைய இது செயற்படுத்தப்படுகிறது.

இதன் பிரதிபலனாக இராணுவத்துக்குரிய சப்பாத்துக்கள் மற்றும் பதக்கங்கள் என்பன பாரியளவில் வியாபாரி ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டமை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட பாரிய இராணுவ உபகரணங்கள் கைப்பற்றப்பட்டமை இதுவே முதற் தடவையாகும்.

இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் இராணுவத்துக்குரிய பொருட்களை தனியாருக்கு விற்பனை செய்து பணம் சம்பாதிக்கும் வர்த்தகம் குறித்த தகவல்களும் வெளியாகி உள்ளதுடன் -



இவற்றைக் கண்டுபிடிக்க எதிர்காலத்தில் மேலும் விசாரணைகள் மற்றும் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்கு இராணுவ பொலிஸ் நடவடிக்கை எடுத்துள்ளது. (தே)

# சுதந்திரக்கட்சி மாநாடு அடுத்த மாதம் மகரகமவில்!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகப் பல்வேறு முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக - கட்சியின் தேசிய மாநாட்டை அடுத்த மாதம் 7 ஆம் திகதி மகரகமவில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


கட்சியில் தற்போது நிலவும் உள்முரண்பாடுகள் தொடர்பாக இந்த தேசிய மாநாட்டில் கலந்துரையாடி தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை ஏற்ற பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் சமாதான முயற்சிகள் குறித்து கட்சியின் தேசிய மாநாட்டில் அனுமதியைப் பெற்றுக்கொள்வதும் இதன்போது இடம்பெறவுள்ளது.

அத்துடன் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# 4ஆவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்றது பங்களாதேஷ்




பதுல்லா —

பங்களாதேஷ் - கென்ய அணிகளுக்கிடையே பதுல்லாவில் நடைபெற்ற 4ஆவது சர்வதேச ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கென்ய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. அந்த அணியின் ஒபுயாவுடன், ஓமா ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 29ஐத் தொட்டவேளை, 6 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த ஒபுயா, மொட்ராசா வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து மொடி களமிறங்க, 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஓமா - மொகமட் வீசிய பந்தை ரஜின் சாலேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மொடியுடன், ரிக்கலோ இணைந்தார். இருவரும் சிறப்பாக ஆடி அணியை வலுப்படுத்தினர். ஸ்கோர் 125ஐத் தொட்டவேளை, 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த மொடி - மொகமட் வீசிய பந்தை ரஜின் சாலேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக ஒபுயா களம் புகுந்தார். அந்தவேளை, 87 பந்துகளில் 9 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரிக்கலோ, ரபீக் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.


அடுத்து களமிறங்கிய ஒடோயோ 1 ஓட்டத்துடனும், மிர்ஷா ஓட்டமெதையும் பெறாமலும் அப்துல் ரசாக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

அவர்களையடுத்து ஏ.சுஜி களமிறங்கினார். அவர் 22 பந்துகளில் 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 30 ஓட்டங்களைப் பெற்று மொட்ராசா வீசிய பந்தில் போல்டானார்.

அடுத்து ஒன்கொண்டோ களம் புகுந்தார். அந்தவேளை, 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஒபுயா - ரசலின் பந்தில் போல்டானார்.

தொடர்ந்து கமாண்டே களமிறங்க 3 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஒன்கொண்டோ ரன் அவுட்டானார்.

இறுதியாக லுசெனோ களமி



றங்க, 50 ஓவர்கள் நிறைவில் கென்ய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது.

ஆடுகளத்தில் கமாண்டே 6, லுசெனோ ஓட்டமெதையும் பெறாமல் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மொட்ராசா, ரசாக், ரபீக் ஆகியோர் தலா 2, ரசல், ஹுசைன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 233 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் அணி களமிறங்கியது. அந்த அணியின் நபீஸுடன், ரஜின் சாலே ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கினார்.

ஸ்கோர் 29ஐத் தொட்டபோது - நபீஸ் 4 பவுண்டரிகள் அடங்கலாக 20 ஓட்டங்களுடன் லுசெனோ வீசிய பந்தை ரிக்கலோவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய அப்ரப் அகமட் 9 ஓட்டங்களைப் பெற்று ஒடோயோ வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்தும், அஷ்ரபுல் 11 ஓட்டங்களைப் பெற்று ஒன்கொண்டோ வீசிய பந்தை லுசெனோவிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து சாலேயுடன், ஹபிபுல் பசார் இணைந்து கொண்டார். இந்த இருவரும் சிறப்பாக ஆடி சாலே சதத்தையும், பசார் அரைச்சதத்தையும் அடித்து அணியின் வெற்றியை உறுதி



செய்தனர்.

இவர்கள் நான்காவது விக்கெட்டுக்காக 175 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இறுதியாக பங்களாதேஷ் அணி 41.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றதனால் 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் கடைசியாக பசார் சிக்ஸர் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

சாலே 16 பவுண்டரிகள் அடங்கலாக 108 ஓட்டங்களுடனும், பசார் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 64 ஓட்டங்களையும் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

## விளையாட்டு

## மூன்றாவது டெஸ்ட் போட்டி மேற்கிந்தியத் தீவுகள் 4/256



நேப்பியர் —

நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1 விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அந்தவேளை, கங்கா 31, லாறா 28 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று அவர்கள் இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இதில் கங்கா மேலதிகமாக 7 ஓட்டங்களைப் பெற்று 38 ஓட்டங்களுடன் பொண்ட் வீசிய பந்தில் போல்டானார்.

அடுத்து மோட்ரன் களம் புகுந்தார். லாறாவுடன் இணைந்து அவர் சிறப்பாக ஆடினார். இந்த நிலையில் முன்னைய போட்டிகளில் தடுமாறிய லாறா 12 பவுண்டரிகள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்று அஸ்ரில் வீசிய பந்தில் போல்டானார்.

தொடர்ந்து களமிறங்கிய சந்தர்போல் 2 ஓட்டங்களை மட்டும் பெற்று ரன் அவுட்டானார்.

அடுத்ததாக மோட்ரனுடன், பிறாவோ இணைந்தார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது.

ஆடுகளத்தில் மோட்ரன் 8 பவுண்டரிகள் அடங்கலாக 70, பிறாவோ 22 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெறவிருந்த முதல் டெஸ்ட் போட்டி மழை காரணமாக நேற்றைய ஆட்டம் நடைபெறவில்லையென அறிவிக்கப்பட்டது. ஆடுகளம் மழை நீரால் நிரம்பிய காட்சி இது. இன்று ஆட்டம் சற்று முன்னதாக 10 மணிக்கு ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்பட்டது.

## இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா 369 ஓட்டங்கள்



டேர்பன் —

தென்னாபிரிக்க - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே டேர்பனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் நாள் ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆடுகளத்தில் ஹுசே 10, சைமன்ஸ் 4 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

இரண்டாம் நாள் அவர்கள் இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இதில் சைமன்ஸ் 13 ஓட்டங்களுடன் நெல் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கில்கிறிஸ்டும் 2 ஓட்டங்களை மட்டும் பெற்று நெல் வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து வோன் களமிறங்கினார். அவர் 31 பந்துகளில் 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 36 ஓட்டங்களைப் பெற்று பொலக் வீசிய பந்தை டி-வில்லியர்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கஸ்பரோவிச் 7 ஓட்டங்களைப் பெற்று நெல் வீசிய பந்தை டி-வில்லியஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக ஸ்ருவர்ட் கிளார்க் களத்தில் இறங்கினார். சற்று நேரத்தின் பின்னர் 10 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹுசே - கலிஸ் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதனால் அவுஸ்ரேலிய அணி 369 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆடுகளத்தில் கிளார்க் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் என்ரினி, நெல் இருவரும் தலா 3, கலிஸ் 2, பொலக், போஜே இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த அணியின் சிமித்தும், டி-வில்லியஸும் ஆரம்ப ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் சிமித் ஓட்டமெதையும் பெறாமலேயே லீ வீசிய பந்தை லாங்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி அதிர்ச்சியடைந்தது.

அடுத்து களமிறங்கிய கிப்ஸும்



வெறும் 9 ஓட்டங்களை மட்டும் பெற்று கஸ்பரோவிச் வீசிய பந்தில் போல்டானார். அப்போது ஸ்கோர் 10ஆக இருந்தது.

தொடர்ந்து டி-வில்லியஸுடன், கலிஸ் இணைந்து கொண்டார். இந்த இருவரும் சிறப்பாக ஆடி அணியைத் தூக்கி நிறுத்தினர். இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆடுகளத்தில் டி-வில்லியஸ் 48, கலிஸ் 12 பவுண்டரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

## வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள்

யாழ்ப்பாணம் —

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நாளை நண்பகல் 12.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ள வலயமட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள பாடசாலைகள் ஏ, பி, சி, டி என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 15 வயதின் கீழான ஏ பிரிவில் யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, வட்டு.மத்திய கல்லூரியும் - பி பிரிவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, குளமங்கால் ஆர்.சி. வித்தியாலயம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் - சி பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரியும், டி பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி, பொன்னாலை வரதராஜப் பெருமாள், இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயமும் இடம்பெற்றுள்ளன.

17 வயதின் கீழான ஏ பிரிவில் யூனியன் கல்லூரி, விக்ரோறியா கல்லூரியும் பி பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயா கல்லூரியும், சி பிரிவில் இராமநாதன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், டி பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, குளமங்கால் ஆர்.சி. வித்தியாலயமும் இடம்பெற்றுள்ளது.

19 வயதின் கீழான ஏ பிரிவில் யூனியன் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயமும், பி பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரியும் சி பிரிவில் வட்டு. மத்திய கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும், டி பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் இடம்பெற்றுள்ளன.

போட்டிகள் மைதானம் I, II, III, IV பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

## பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி பதக்க பட்டியல்

அவுஸ்ரேலியா —

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் பதக்க பட்டியல் வருமாறு -

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அவுஸ்ரேலியா | 84 | 69 | 68 | 221 |
| இங்கிலாந்து | 36 | 40 | 34 | 110 |
| கனடா | 26 | 29 | 31 | 86 |
| இந்தியா | 22 | 17 | 11 | 50 |
| தென்னாபிரிக்கா | 12 | 13 | 13 | 38 |
| ஸ்கொட்லன்ட் | 11 | 7 | 11 | 29 |
| ஜமைக்கா | 10 | 4 | 8 | 22 |
| மலேசியா | 7 | 12 | 10 | 29 |
| நியூஸிலாந்து | 6 | 12 | 13 | 31 |
| கென்யா | 6 | 5 | 7 | 18 |
| சிங்கப்பூர் | 5 | 6 | 7 | 18 |
| நைஜீரியா | 4 | 6 | 7 | 17 |
| வேல்ஸ் | 3 | 5 | 11 | 19 |
| சைபிரஸ் | 3 | 1 | 2 | 6 |
| கானா | 2 | 0 | 1 | 3 |
| உகண்டா | 2 | 0 | 1 | 3 |
| பாகிஸ்தான் | 1 | 3 | 1 | 5 |
| பப்புவா நியூகினியா | 1 | 1 | 0 | 2 |
| தன்சானியா | 1 | 0 | 1 | 2 |
| நமீபியா | 1 | 0 | 1 | 2 |
| இலங்கை | 1 | 0 | 0 | 1 |



நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்க மண்டபத்தில் யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்க ஏற்பாட்டில் மகளிர்தின விழா இடம்பெற்றபோது முதன்மை விருந்தினர் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா உரையாற்றுவதையும், பயிற்சி பெற்ற மாணவி ஒருவருக்கு முதன்மை விருந்தினர் சான்றிதழ் வழங்குவதையும், அரங்கில் நடைபெற்ற நடன நிகழ்வையும், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் - தயாளன்)

## வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்—

சேவாலங்கா தொண்டு நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகள் கையளிக்கும் வைபவம் இன்று தும்பளை புதிய குடியிருப்பில் இடம்பெறவுள்ளது.

தே.தேவராஜன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு - முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். இதன் போது முதன்மை விருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர் உரை நிறைவாக வீடுகள் கையளிக்கும் நிகழ்வு என்பன இடம்பெறும்.

## சமுர்த்தி முத்திரைகளை பெற்றுக் கொள்ளலாம்

யாழ்ப்பாணம்—

நல்லூர் பிரதேச செயலகத்தின் இந்த ஆண்டின் முதல் ஆறுமாத காலத்துக்கான சமுர்த்தி முத்திரைகள் அந்தந்தப் பிரிவுக்கான சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பின்னரை மாதத்தில் சமுர்த்தி முத்திரைகளைப் பெற்றவர்கள் தமது ஆளடையாள அட்டை, பங்கீட்டு அட்டை, முந்தைய முத்திரை அடிக்கட்டை என்பவற்றுடன் தமது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு, தமது சமுர்த்தி வங்கியில் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (110)

# சிறப்பாக நடைபெற்று முடிந்த அனைத்துலக மகளிர் தினம்

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்குகூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அனைத்துலக பெண்கள் தினமும், 2005ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

மகளிர் கழகத் தலைவி இ.இராசமணி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்- யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மனையியல் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு முதன்மை விருந்தினர் இ.த.விக்னராஜா சான்றிதழ் வழங்கினார். தொடர்ந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சி.க.கூ.சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு, கணினி பயிற்சியில் சித்தியடைந்த சமாசப் பணியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கல் என்பவற்றைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (த,ரி,நி,வ)

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி—

இந்த ஆண்டுக்கான முறைசாரா கல்வி பயில - பாடசாலையைவிட்டு விலகிய மாணவர்கள்ள விண்ணப்பிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்வி முறைசாராக் கல்விப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி, வரணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கணினி வன்பொருள், கணினி மென்பொருள், உடையமைத்தல், சிகை அலங்காரம், கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், மேற்படி பாடசாலைகளில் விண்ணப்பப் பத்திரங்களையும், விபரங்களையும் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பாடசாலைகளில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (29)

## புதிய கட்டடத் திறப்பு விழாவும் பெயர்ப்பலகை திரைநீக்கமும்

ஏழாலை—

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழாவும், பெயர்ப்பலகை திரைநீக்கமும் எதிர்வரும் புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் த.வாமதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்விசார் திட்ட முகா மையாளர் வைத்தியகலாநிதி அ.பேரின்பநாதன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், சிறுவர் பாதுகாப்பு நிதியத் திட்ட அலுவ லர்களான உமா சுந்தரலிங்கம், கிருஷ்ணா சின்னத்தம்பி, ஏழாலை வடக்கு கிராம அலுவலர் எஸ்.சிவா னந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நன்கொடை சேகரிப்பு

மட்டுவில்—

தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் வளர்ச்சிக்காகப் பொது மக்களிடமிருந்து நன்கொடை சேகரிக்கப்படவுள்ளது.

இதற்காக மேற்படி கலாசாரப் பேரவையினரால் நன்கொடை ரிக்கற்றுக்கள் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் இரண்டாம் நாளான இன்று விற்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் மேற்படி நன்கொடை ரிக்கற் விற்பனையை இன்று காலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பாரென தென்மராட்சி கலாசார அலுவலர் திருமதி ப.சிவஞானராசா தெரிவித்தார். (24)

## ஔவையார் விழா

யாழ்ப்பாணம்—

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் ஔவையார் விழா விஞ்ஞாபனம் இன்று இடம்பெறவுள்ளது.

இன்றைய சத்ய நட்சத்திர தினத்தில் காலை 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து விசேட பூஜையும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து 12 மணியளவில் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

அடியார்கள் கலந்து கொண்டு விநாயகர் அருள் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர்.

## முரல்மீன் தாக்கி மீனவர் காயம்!

கொக்குவில்—

கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரை முரல் மீன்தாக்கியதில் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் கொழுஞ்சி விடியல்பிட்டியில் நடைபெற்ற இந்த சம்பவத்தில்- குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியைச் சேர்ந்த ராஜன் ஜெகநாதன் (வயது 33) என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தவராவார். (206)

## ஓட்டோ தடம் புரண்டதில் மூவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம்—

நுணாவில் - சாவகச்சேரி வீதியில் ஓட்டோ ஒன்று தடம்புரண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கே.தர்மராஜா(வயது 46), அவரது மனைவி ரி.சிறிசுமணா(வயது 32),மகன் ரி.மரியன்(வயது 4) ஆகியோரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மட்டுவில் தெற்கில் உள்ள தமது வீட்டிலிருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தமது உறவினர்களைப் பார்ப்பதற்காக ஓட்டோவில் சென்று கொண்டிருந்தபோதே நுணாவில் சந்திக்கு அண்மித்த பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## தாக்கப்பட்ட மாணவனிடம் ஆணைக்குழு வாக்குமூலம்

யாழ்ப்பாணம்—

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது காயமடைந்த மாணவனிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு வாக்குமூலம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது படையினரால் தாக்கப்பட்டு காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவரான சின்னப்பா சுதர்சனிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தரணி மு.றெமீடியஸ், அலுவலக உதவியாளர் முத்துக்குமார் ஆகியோர் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

குறிப்பிட்ட மாணவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டதையடுத்து இது தொடர்பாக இராணுவ தரப்புடன் தொடர்பு கொண்டு, உரிய விசாரணை நடத்தவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

## முறைசாராக் கல்வி மாணவர்களுக்கு நாளை சான்றிதழ் வழங்கும் வைபவம்

சாகச்சேரி—

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த ஆண்டு முறைசாராக் கல்வி பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நாளை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ. வேதநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கணினி மென்பொருள், பேச்சு மூல ஆங்கில பயிற்சி, சிகை அலங்காரம் ஆகியதுறைகளில் பயிற்சியைப் பெற்ற மாணவர்கள் தவறாது நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்வி முறைசாராப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (29)

## தவக்கால நற்சிந்தனை



இன்றைய தினசரி வாழ்க்கைச் சிக்கல்களில் பல தீர்மானங்களை நாம் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். தீயவற்றை, தீயவர்களை வெறுத்து, நல்லவற்றை, நல்லவர்களைத் தெரிந்து கொள்கிறோம். இது நமது நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகள். ஒன்றின் மீது நம்பிக்கை வைத்து, மற்றவற்றை உதறித் தள்ளிவிடுகிறோம். நமது அனுதின வாழ்க்கையில் சரியானவற்றை, பொருத்தமானவற்றைத் தெரிந்து கொள்கின்ற நாம் - நம்மைப் படைத்த இறைவனின் காரியங்களிலும் இத்தகைய மன நிலையில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இறைவனும் எம்மை இறைவார்த்தைகளால் ஊட்டம் பெறச் சொல்லுகிறார். அவரின் உயிருள்ள வார்த்தை எம்மைத் தகுந்த வழியில் நடக்க இட்டுச் செல்கிறது. பாட்டி ஒருவர் ஆலயத்தில் சுரூபங்களைத் தொட்டு முத்திசெய்யும், மிக்கேல் சம்மனசு சம்மனசையும், அவர் காலடியில் வீழ்ந்து கிடந்த பசாசையும் தொட்டு முத்தி செய்தாராம். இது பற்றிக் குருவானவர் கேட்டபோது, பாட்டி கூறியது - சுவாமி நான் இறந்து போனால் மிக்கேல் சம்மனசு பார்த்துக் கொள்வார். ஆனால் நரகத்துக்குப் போனால் இந்தப் பசாசு என்னைப் பார்த்துக் கொள்ளும். இதற்காகவே நான் இருவரையும் பகைக்காமல் முத்தி செய்கிறேன் என்றாராம். இது பிளவுபட்ட மனநிலையை எடுத்துக் காட்டுகிறது. சோதனை வேளைகளில் தெளிவான பாதையை வேண்டிச் செபிப்போம்.

மோ.தார்சீசியஸ்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : மோ.ஜதுசன்
முகவரி : பண்டத்தரிப்பு.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ---------------------

முகவரி ---------------------

பிறந்த ஆண்டு ---------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------
பெற்றோர் ஒப்பம்

## கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ மதிலுடன் மோதி பலத்த சேதம்!

யாழ்ப்பாணம்—

மானிப்பாய்க்கும் கட்டுடைக்கும் இடையில் அமைந்துள்ள மதுபான நிலையத்துக்கு அண்மையில் கடந்த வியாழக்கிழமை மாலை 4மணியளவில் ஓட்டோ ஒன்று மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது ஓட்டோ ஒன்று மிக வேகமாக வந்து மதுபான நிலையத்தடியில் நின்ற வாகனத்தை கடக்க முற்பட்ட வேளை, ஓட்டோவின் பிறேக் அறுந்ததால் ஓட்டோவை நிறுத்த முடியாமல் மதுபான நிலையத்துக்கு அருகிலுள்ள மதிலுடன் மோதியது.

இதில் ஓட்டோவின் சாரதிக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டதுடன், ஓட்டோ சாரதியின் சாதுரியத்தால் ஓட்டோவில் பயணம் செய்த மூன்று பிரயாணிகளும் தெய்வாதீனமாக சிறுகாயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். (47)




**சிறுகதை**

# பட்டாம்பூச்சிகள் சிறகடிக்க

**சோ.சி.கலைக்கதிர்**

மங்களேஸ் தனது சைக்கிளை உருட்டியவாறு பாடசாலை வளாகத்துள் முதல் முதலாக காலடி வைக்கிறார். ஆசிரிய நியமனம் கிடைத்து ஒரு ஆசிரியனாக பாடசாலை வளாகத்துள் நுழைகிறார். இந்தப் பாடசாலை அவருக்குப் பரிச்சயமானது. அவர் ஆரம்பக் கல்வி முதல் இடைநிலைக் கல்வி வரை கற்றது இங்குதான். தற்போது சற்றுத் தூரத்தில் வசித்து வருகின்ற போதும் இவரது பிறந்த வீடு பாடசாலைக்கு பக்கத்திலேயே உள்ளது.

அவருக்கு சின்ன வயதில் படிக்க வேண்டும். வெள்ளை சேட் போட்டு ரை கட்டி (சின்னம்) பச் குத்தி அழகாக சப்பாத்துப் போட்டு பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்ற ஆசை இருந்தது. அண்ணன் குகன் பாடசாலைக்கு செல்லும் போது ஒவ்வொரு நாளும் இந்த ஆசை வளரும். ஆனாலும் அருகில் உள்ள இந்தப் பாடசாலையைப் பார்க்கும் ஒவ்வொரு பொழுதும் படிப்புப் பற்றிய பயமே வளரும்.

ஒருநாள் மங்களேசும் அம்மாவும் பாடசாலையைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கும் போது பாடசாலையில் யாருக்கோ ஒரு ஆசிரியர் குளறக் குளற அடித்துக் கொண்டிருந்ததை பார்த்த பின் படிப்புப்பற்றி பயமே வளரத் தொடங்கியிருந்தது. அந்தப் பாடசாலையில் கிட்டத்தட்ட பதினைந்து வரையான ஆசிரியர்களே கற்பித்தனர். அதில் அதிகமானவர்கள் வயது முதிர்ந்தவர்கள். அதுவும் ஊரைச் சேர்ந்தவர்கள், கந்தையா வாத்தியார், கனகையா வாத்தியார், மூத்த தம்பி வாத்தியார் இதில தலைமை வாத்தியார், முந்தி இஞ்சை படிப்பீச்ச கணபதிப்பிள்ளை வாத்தியாற்றை மகன் சிவயோகன் வாத்தியார். அவர் சரியான கண்டிப்பானவர். ரீச்சர்மாரும் அதிகமாக எல்லாரும் வயதானவர்கள்தான்.

அன்னம்மாக்கா ரீச்சர், சின்ன முத்து அக்கா ரீச்சர், தேவியக்கா ரீச்சர், இராசம்மக்கா ரீச்சர். இப்படி பலர் இவர்கள் ஊரோடு கொண்டிருந்த நெருக்கம் இவர்களது பேர்களோடு அக்கா என்ற உறவுப் பெயரையும் சேர்த்துள்ளது. இராசம்மா என்ற பெயரோடு அக்கா என்ற சிறப்பு உறவுப் பெயரும் சேர்ந்து இராசம்மாக்கா என்பது போலவே இருந்தது. இவர்களும் கண்டிப்பானவர்கள் என்றுதான் வீட்டில் உள்ளவர்கள் சொல்ல அவன் கேள்விப்பட்டிருக்கிறான்.

எழுத்துப் பழகிறதுக்கு தேவியக்கா ரீச்சரிட்ட படிச்சால் வாழ்க்கையிலை எழுத்து மறக்க மாட்டுதுகள்.

அதுமட்டுமில்லை, மனுசி மண்ணில் எழுதவிட்டு பழக்கிறதாலை எழுத்தும் வடிவாய் வரும் என்று மங்களேசின் மாமா கூறியது அவனால் என்றும் மறக்கமுடியாது. இப்படியான காட்சிகளாலும், செய்திகளாலும் கல்வி பற்றிய ஆர்வம் குறைந்தாலும் பாடசாலை செல்வதற்கான வயது வந்துவிட்டது.



தவணை ஆரம்பம், தை மாதம் பாடசாலைக்குப் புறப்படும் போது குதூகலம்தான். கடைசிப் பிள்ளை என்பதால் வீட்டில் கடுமையான செல்லம். பாடசாலைக்கு அன்று செல்லும் போது புது உடுப்பு, புத்தகப் பை, தண்ணீர்ப் போத்தல் எல்லாவற்றுக்கும் மேலாக இனிப்புப் பண்டங்கள் கை நிறைய. பாடசாலை வளாகத்துள் அப்பாவால் அழைத்து வரப்பட்டு முதல் முதலாக நுழைகிறான்.

வகுப்புக்கு அழைத்துச் சென்று இருத்திவிட்டு அவன் அப்பா வெளியே போய்விடுகிறார். அங்கு இருந்த சம வயதுக்காரர் அனைவருக்கும் அன்றைய நாள் முதல் நாள் என்பதால் ஒரே திகைப்பு முகத்தில் பயம் ஒருவரை ஒருவர் பார்த்தபடி கல்லாய் இருக்கின்றனர்.

ரீச்சர் தடியுடன் கையில் புத்தகக் கட்டோடு வருகிறார். முகத்தில் புன்னகை, தலையில் கொண்டை, அழகான குண்டு ரீச்சர். அவனுக்கு அவவைத் தெரியும்.

அவதான் தேவியக்கா ரீச்சர். ஒரு முறை வேலுமாமா வீட்டிலை வீடு கட்டி விளையாடிக் கொண்டிருக்கேக்க சீட்டுக்காசு வேண்ட வந்தவ அப்ப.

இவர் இந்த வருசம் பள்ளிக்கூடம வாரார் என்று மாமி அறிமுகம் செய்ய அவன் கையைப் பிசைந்து கொண்டு மாமிக்கு பின்னால் ஒளிந்து கொண்டது இப்போது ஞாபகத்துக்கு வந்து போனது.

ரீச்சர் வந்து புத்தகத்தை எல்லாம் வைத்துவிட்டு ஒவ்வொருதராக எழுப்பி பெயர் கேட்கத் தொடங்கினார்.

இதற்கிடையில் இன்றுதான் வீட்டை விட்டு முதல் முதலாக இப்படி பாடசாலைக்கு வந்திருப்பதால் அனைவருமே ஒருவரைப் பார்த்து ஒவ்வொருத்தராக எல்லோருமே அநேகமாக அழத் தொடங்கியிருந்தனர்.

மங்களேசுக்கும் அப்படித்தான். ஆனால் அவனுக்கு அழுது கொண்டிருக்க பிடிக்கவில்லை. அழுதபடி வகுப்பறையை விட்டு வெளியேறி வீட்டை நோக்கி ஓடிவிட்டான். பக்கத்து வீடு என்பதால் ரீச்சர் வீடு வரை துரத்திச் சென்று வீட்டிலிருந்து அழைத்து வந்து வகுப்பில் இருத்தியதை நினைக்க மங்களேசுக்கு சிரிப்புத்தான் வந்தது.

ஆனா, ஆ....வன்னா....

எழுதப் பழகியது அது பெரும் கதை. பிள்ளையார் பாரதம் எழுதிய கதைபோல மங்களேஸ் ஆனா ஆவன்னா எழுதத் தொடங்கியதற்கும் பெரும் கதையே உண்டு.

வகுப்பில் எல்லோர் முன்னும் மண்ணை பரப்பி அதில் சுட்டுவிரலால் எழுத வேண்டும். ரீச்சர் கையைப் பிடித்து எழுதவைப்பார். அவனுக்கு எழுதுவதென்றால் சரியான பஞ்சி. மண்ணைப் பரப்பி விட்டு பார்த்துக் கொண்டிருப்பான்.

ரீச்சர் கேட்டால் ஊத்தை மண் என்பான். இல்லை என்றால் பக்கத்தில் உள்ளவர்களுக்கு மண்ணை அள்ளிக் கொட்டிவிட்டு பார்த்துக் கொண்டிருப்பான். இதையெல்லாம் பார்த்து விட்டு தகப்பனிடம் சொல்லி மாலை வகுப்புக்கு வீட்டுக்கு வரச்சொல்லி அங்கும் வதை. ஒரு நாலு பேர்தான் - அதனால் அங்கே விளையாட ஏலாது.

ஒருவாறு அழுதழுது உயிர் மெய் வரையும் எழுதிப் பழகிய பின் அதிலே போட்டித் திறனை வளர்க்க அது சரியான முறை என்பது அவரின் எண்ணம். போட்டிக்கு எழுத்தை சொல்லிச் சொல்லி எழுத வேண்டும். மங்களேஸ் அதில் கடைசிதான், இருந்தாலும் சகபாடிகளை வெருட்டி ஏதோ சமாளித்துக் கொள்வான். இப படி அன்றிருந்த ஆரம்பக் கல்வி இன்று எவ்வளவோ மாறியிருந்தது.

பாடசாலைக்கு வருமுன்பே பாலர் பாடசாலைகளில் பயிற்றப்பட்டு மாணவர்கள் பாடசாலைக்கு வருவார்கள். இதனால் அவர்களிடம் கல்விக்கான மனநிலை இருக்கும். அதைவிட ஆசிரியர்களுடைய கற்பித்தல் முறையும் மாறியிருந்தது.

வகுப்பறை அலங்காரமும், கற்பித்தல் வடிவ மாற்றங்களும் மாறிப் போய் விட்ட இந்த நேரத்தில் ஆசிரியனாக பாடசாலைக்குள் செல்லும் மங்களேசை வரவேற்று உரிய பதிவுகளை மேற்கொண்டு நேரசூசியை அவனது கையில் கொடுத்து தரம் 4 வகுப்பறைக்கு அழைத்துச் சென்றார் அதிபர்.

வணக்கம் சேர் என்று வரவேற்ற மாணவர்கள் அதிபரோடு, தந்தையோடு கதைப்பது போல சேர் இவர் ஆ..ரு... என்று கேட்க இவர்தான் இனி உங்களுக்கு வகுப்பாசிரியர் என்று கூற,

அச்சா....எங்கட சேர் நல்லசேர்.

என்று ஒரு மழலை சொல்ல ஓ... ஓ...சேர் இண்டைக்கு இப்ப அழகியற் பாடம் பாட்டுப் படிப்பம் என்று பிள்ளைகள் கேட்க, சேர்....நான் போட்டுவாறன்... என்று அதிபர் வகுப்பறையை விட்டு வெளியே சென்றார்.

பிள்ளையல், உங்களுக்குத் தெரிஞ்ச பாட்டொண்டை இண்டைக்கு பாடிக்காட்டுங்களேன் பாப்பம்...என்று மங்களேஸ் சேர் கேட்க, பிள்ளைகள் பாடத் தொடங்கினர்.

பட்டாம் பூச்சி பாடலோடு மனசில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடிக்க மங்களேஸ் சேர் மாணவர்கள் பாடி ஆடுவதை பார்த்துக் கொண்டிருந்தார்.

# நூல் அகம்



| | | |
|---|---|---|
| இதழ் | - | தை (கவிதைக் காலாண்டிதழ்) |
| ஆசிரியர் | - | அறிவுமதி (தமிழ்நாட்டுக் கவிஞர்) |
| வெளியீடு | - | சாரல் பதிப்பகம் - சென்னை |

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் என்றான் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன். அந்த தமிழ்ப்பால் பொங்கத் தொடங்குகிறது தை.

தமிழ்க் கவிதை பல ஆயிரம் வயதுகளையுடையது. பல அடுக்குகளைக் கொண்டது. எல்லா அடுக்குகளுக்கும் இடம் கொடுத்தவை கண்ணதாசன், வானம்பாடி அன்னம் போன்ற இலக்கிய இதழ்கள். அந்த இலக்கியப் பெருந்தன்மை இன்றுள்ள இலக்கிய இதழ்களுக்கு இல்லை. ஒரு சிலரை மட்டுமே தேர்ந்தெடுத்து எழுத வைத்து அவர்கள் மட்டும்தான் கவிகள் என்று அவை நிறுவ நினைக்கின்றன.

ஆனால், இப்போது தான் தமிழ்க்கவிதைகள் தனித்த அடையாளங்களோடு வான் பார்த்துக் கிளைவிரிக்கத் தொடங்கியிருக்கின்றன. அந்த மரங்களின் கிளைகளில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகத் தொட்டில்கள் ஆடுகின்றன. உழுத களைப்போடு வந்து பசியாற தூக்குச் சட்டிகள் கஞ்சியோடு காத்திருக்கின்றன.

வீட்டுக்குள் கவிதையை ஒரு போன்சாய் போல வளர்க்கும் குழுமனப்பான்மை கொண்ட அந்த வெள்ளைக் கவிஞர்களுக்கு இந்தப் பெருமரங்களின் வளர்ச்சி அச்சத்தை ஏற்படுத்துகிறது. அந்த மரங்களின் வேர்களால் தங்கள் வீட்டுச் சுவர்களில் விரிசல் விழுமோ எனப் பயந்து நடுங்குகிறார்கள்.

எல்லா ஒடுக்கு முறைகளையும், மூடுதிரைகளையும் கடந்து ஒதுக்கப்பட்ட சாதியின் குரலும் ஒடுக்கப்பட்ட பெண்ணியக் குரலும் இன்றைய கவிதையின் குரலாக ஓங்கி ஒலிக்கிறது. மார்க்சிஸம், பெரியாரிஸம், தலித்தியம், பெண்ணியம், சூழலியம், தமிழ்த் தேசியம் சார்ந்து எழும் இன்றைய காலத்தின் குரலைப் பதிவு செய்வதற்காகவே வருகிறது தை. நேர்மையோடு ஒரு முழுமையான கவிதை இதழாகத் தொடரும்.

புதிதாக எழுத வருகிறவர்களுக்கும் புரிதலோடு எழுதுகிறவர்களுக்கும் இடையில் ஒரு தமிழ்ப்பாலமாய் தை இருக்கும்.

- ஆசிரியர் -



| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | பகிர்வு (கவிதைத் தொகுப்பு) |
| நூல் ஆசிரியர் | - | ஜெ.சுபாஷினி |
| விலை | - | ரூபா 175/= |

'பகிர்வு' என்ற கவிதை நூலின் ஊடாக யாழ்ப்பாணத்தில் இன்னுமோர் பெண் கவிஞரை நாம் இனம் காண்கிறோம். யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையில் சிறப்பு பட்டம் பெற்ற ஜெ.சுபாஷினியே இந்த நூலாசிரியர். தான் பார்த்தவற்றை, கேட்டவற்றை, கண்டவற்றை இலக்கிய நயத்துடன் கவிதைகளாக பிரசவித்துள்ளார் சுபாஷினி.

தற்கால யாழ்ப்பாணத்தை எவ்வாறான நிலைகளில் வகைப்படுத்தி வடிவம் கொடுக்க முடியுமோ அவற்றை நிறைவு செய்ய பகிர்வு மூலமாக கவிஞர் முயற்சி செய்துள்ளதை அதனைப் பருகியதன் மூலம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

வெள்ளிநாதம், சங்குநாதம், உதயன், சுடர் ஒளி ஆகிய பத்திரிகைகளின் ஊடாக வாசர்களுடன் உறவாடிய தன் கவிவரிகளில் எண்பது கவிதைகளை உள்ளடக்கியதே பகிர்வு, இளம் கவிஞரின் வேகம், துடிப்பு, சமூக நோக்கு, கருத்தை வெளிப்படுத்த முனையும் முறைமை போன்ற விடயங்கள் பகிர்வைப் பார்த்தவர்கள் புரிந்திருப்பர்.

பெண்ணியம், போராட்டம், கல்வி, சமாதானம், சுனாமி, நவீனத்துவம், காதல், சாதீயம் போன்ற பல தலைப்பிட்டு வரையப்பட்டுள்ள கவிதைகளில் நடைமுறை உதாரணங்களை பல இடங்களில் உட்புகுத்தியிருப்பதன் மூலம் கவிஞரின் சமூகப் பார்வைக்கு சான்று பகிர்கின்றது. காலத்தின் கோலங்கள்? என்ற கவிதையின் மூலமாக எம் கடந்த இரு தசாப்தகால அவலங்கள், கைதுகள், காணாமற்போகும் சம்பவங்களை இவ்வாறு கவிதையாக்குகிறார் கவிஞர்.....

வெடிகள் பல வெடிக்கும்
குண்டுமழை பொழியக் குருதி சிதறும்
கண்ணிவெடி மீறிக்கதறிப் பலர் செத்தார்.
வாழப் பிறந்த நாமிடையில் மடிவதோ?
ஆக, தாழக்குழி வெட்டி 'பங்கர்' எனச்
சாற்றி உயிரையாங்கு பதுக்கினோமே....

கவிஞரின் கற்பனை மட்டுமல்ல நம்மவர்களின் இன்றைய நிலமைகளை 'வள்ளுவர் விஜயம்' 'பாரதி விஜயம்' என்ற கவிதைகளின் ஊடாக புட்டுவைக்கிறார். சோதனை சாவடிகளில் இராணுவம் புரியும் பேதலித்த செயல்களை அப்பட்டமாக விபரிக்கிறார் 'வேண்டாத பயணங்கள்' என்ற கவிதையில் சமாதானத்தை ஆட்டிவிக்கும் ஆயுதக் குழுக்களை குறியீடுகளின் ஊடாக தோலுரித்துக் காட்டுகிறார் 'நம் கடமை' என்ற கவியில்.

மூத்த ஓவியர் ரமணியின் அட்டைப் படம் நூலிற்கு அழகான அடையாளத்தை ஏற்படுத்தியதுடன், அறுபது பக்க கவிதைகளின் நிழல்களை முன்பக்கத்திலேயே சித்தரித்தமை நூலிற்கு மேலும் சிறப்பை தந்து நிக்கின்றது. நம்மிடையே இன்னோர் பெண் கவிஞர் தோன்றியுள்ளார் என்ற பூரிப்புடன் 'பகிர்வு' கவிதைகளை பருகிட முடிகிறது.

- இ.விஜேந்திரன்

# கவிதைப் படிகள்

## உன்னில் நான்

சிறிது நேரம் தூங்கி விட்டேன்
விழித்து எழுந்து
பார்த்தேன் என்னை
காணவில்லை - என்னை
நான் எங்கு தேடுவது
சில வேளை பெற்றோரிடம்
சென்றிருப்பேன் என்றால்
அங்கு இல்லை.

உடன் பிறந்தோரிடம்
சென்றிருப்பேன் என்றால்
அங்கும் இல்லை
எங்கு தேடுவது - சரி
என்னவனிடம் போய்
பார்த்தேன் அவனில்
நான் தூங்கியிருந்தேன்.
எப்படிக் கேட்பது - என்னை
திருப்பித் தா என்று
அதனால் அவனிடமே
விட்டு விட்டேன் என்னை.

**S.கயா**



## திருடி விட்டான்

அன்றொருநாள்...
பேருந்தில் ஓர்
அழகனைக் கண்டேன்.
என்னருகில் வந்து
ஹலோ என்றான்.
பார்த்ததோ ஐந்து
நிமிடங்கள்
பேசியதோ மூன்று
வார்த்தைகள்
திருடிவிட்டான்...
என் மணிப்பையையல்ல
என் இதயத்தை.

**லக்ஷி** - அல்வாய்

## தியாகத் தாய்

கார்த்திகை கருக்கிருட்டில்
கண்சிமிட்டும் விண்மீன் அல்ல நீ
ஒரு கோடி விடியல்களின்
உதயமாகை வெளிச்சமாக்கி -
விடிவிற்காய்
விசையான விடிவெள்ளி நீ!
அன்னையென்னும் சொல்லுக்கு
அர்த்தமாய் இருந்தவள் நீ!
தன் மக்கள் தன் குடும்பம்
தலைவன் சிந்தித்த வேளை
எம் நாடு எம் மக்கள்
என்று நீ எழுந்தாய்
பூபதித்தாய் தடம்பதித்தாய்
பூமித்தாய் நிமிர்ந்து பார்க்க
தியாகத்தாய் ஆனாய்.

**தென்றல்**



## ஏமாறும் போகும் அழுங்குகள்

அந்த மரத்திலுள்ள காய்ந்த
பட்டைகளை அழுங்குகள்...
கழற்றத் தொடங்கி விட்டன.

ஒவ்வொன்றாய் பட்டைகளைக் கழற்றி
நிசப்தத்தினூடு,
இராப் பொழுதின்...
விருந்துக்கான ஏற்பாட்டை
செய்யத் தொடங்கி விட்டன.

மரத்தினுச்சியிலிருக்கும் அந்த மயில்
மரணத்திற்காய்...
வளர்க்கப்பட்டதென்று,
அழுங்குகள் நினைத்திருக்கலாம்.

உயிர்குடிக்க எத்தனித்து
மரமேறும்,
அழுங்குகளுக்குத் தெரியாது,
பட்டைகள் கழற்றி
முடிக்கப்பட முன்னர்...
பொழுது புரைப்போகிறதென்பது!

**க.சிந்துதாசன்** பொலிகையூர்

## இறுதி மூச்சின் இயம்புகை

பரந்தெங்கும் விரிந்தபாரின்
இடுக்குகளில்... இருந்துலவும்
காற்று,
உயிரனைத்தும் வாழ
உரமூட்டி நிற்கிறது.

ஐம்பூதங்களிலிதுவும்
ஒன்றாகி,
உயரிடத்திலிருக்கும்
உன்னதத்தாலிதனை
விருப்புகளில்...
வரித்துள்ளோம்.

பற்பல குணங்களினால்...
பெயர் மாற்றம் பெறும் போது
காற்றின் இயம்புகையை
ஏற்றறிய முடிகிறது.


சாளரத்தால் உட்புகுந்து
சில்லெனத் தீண்டுகையில்
சுகம் பெற்று மகிழ்கின்றோம்.
ஓவென்று அலறிவந்து
வாசற் கதவுகளை
உடைத்தெறிய வெறுக்கிறோம்.

தென்றலாய் தவழ்ந்துவிட்டு
காற்றாய்... ஏன்
புயலாய்...மாறுகையில்...
புண்பட்டுத் தவிக்கிறோம்.

ஆக்கத்துக்கும்
அழிவுக்கும் மாறி மாறி
வித்திட்டு நிற்கின்ற காற்றே!
எங்கள் உடலுள்ளும்
வாழ்வதோடு
எம்மை
வாழவும் வைக்கின்றாய்.

உடலுதறிப் போகின்ற
இறுதிக் கணங்களிலே...
உன்னை நினைக்கிறோம்.
நீயே எமை
மறக்கிறாய்
ம ன்... வாசலைத்
திறக்கின்றாய்!

**க.சிந்துதாசன்**







## முகவரி இடு!

நீ ...!
உயர்வானவள்
எங்களின் விளை நிலம்
உனது மெய் விலாசத்தை
நிலை நிறுத்திக் கொள்.

உனது பணி
நிறையவே உண்டு.
உரிமைக்காகவும்,
நீதிக்காகவும்...
விழும் கற்களை
தாங்கிக் கொண்டிருக்கிறாய்.
இயேசுவைப் போல
சிதிலரோ...?
வாழ்க்கை வட்டத்தை
விஷமூட்டி
நிர்வாணமாக்கி
சவப்பெட்டிக்குள் வைத்து
இறுதி ஆணி அடித்தாகிறது...
மண்ணில் புதைப்பதற்கு!
சிறிய வட்டத்தை
விடுத்து,
உயில் போனாலும்,
உதவி விடுவது தான்
கொள்கையாகும் மெழுகுதிரி
போல்
உலகம் போற்றும்
பலஸ்தீன போராளியைப் போல்
உனக்கு ... நீ...
முகவரி இடு.

**போ.பாஸ்கரன்**

புலோப்பளை

## உன்னிடமொரு...



பூகம்ப அதிர்வோடு - என்
உணர்வுகள்
முகிழ் அவிழ்ந்தாலும்
இன்னும்
மௌனமாகவே நான்!
தரிசனங்களால்
விமோசனங் கிடைக்குமென்ற
நம்பிக் கையில் - உன்
வருகைக்காக - விழி
தருகைக்காக,
மௌனமாகவே இன்னும்!
என்றாவது ஒரு நாள்...
மௌனப் பாறைகளின்
அழுத்தத்தால்,
உடைகின்ற போதில்,
விடைகொடுத்து
அனுப்பிவைக்கவாவது
வந்து விடு - என்
இறுதி யாத்திரைக்கு

**நெற்கொழுதாசன்**

## நட்பின் தாய்மடி

எங்களுக்கான
உறவின் விரிசலில்
உட்புகுந்த காலப்பகை
இன்று
கரைந்து போனதில்
உனக்கும், எனக்கும்
அளவற்ற மகிழ்ச்சி!

உன் மடி
தாய்மடியாகி
நான் சிறுத்து அனுபவித்த
தாய்மையில்
என் உயிர்
இறுகக்கட்டியிருந்ததை
நீ நன்றாகவே
அறிந்தவன்!

என் வழிகாட்டியாக
என் வாழ்வில் ஒளியேற்றி
பலமான
வலக் கை
நீ என்பதை
நீ இல்லாத
எனது நாழிகைகளில்
நான் அறிந்து கொண்டேன்!

நமக்குள் நாம் வளர்த்த
கௌரவமற்ற
கோழைத்தனங்களில்
வேர்விட்ட
நமதான நட்பு
நேற்றைய நம் பிரிவின்
அழுகைக் குரலில்
இன்னும் உறவானது!

**கு.பா.தீபச்செல்வன்**


## தேசத்தின் ஆத்மா!

தேசத்தின் ஆத்மா
உரத்து குரலெழுப்புகிறது
உதிர்ந்து போன
உரிமைகளுக்கு
உயிரூட்டி...!

கோடி
உயிர்கள்
ஒடுங்கி
உருவெடுத்திருக்கும்
ஆத்மா
இன்னுமாய்
பலப்படுகிறது
மனிதங்கள்!
மகத்துவமான
மரணங்களை
தழுவிக் கொண்டிருக்க...!


ஓங்கி
ஒலிக்கும்
அதன் ஓசையால்
உணர்வுகளில்
முடிச்சு
நல்ல நிலத்தில்
விழுந்த
நல்ல விதைகளாய்...!

இடைவிடாத
பிரயத்தனங்களோடு
வேட்கை
கொள்கிறது
சுதந்திரம் மீது
இந்த
மகத்துவமான
தேசிய தேசத்து ஆத்மா...!



# தேச விடுதலைக்கு பக்கபலமாக நின்று உரம் சேர்த்தவர்கள் நாட்டுப்பற்றாளர்கள்

## நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன்



கிளிநொச்சி—

தேச விடுதலைக்கு உரம் சேர்த்தவர்கள் நாட்டுப்பற்றாளர்கள் என லெப்.கேணல் நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் தெரிவித்தார்.

தியாகி அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் 8 ஆம் நாள் நிகழ்வு நவம் அறிவுக் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களை மக்களுக்குள் மக்களாக நின்று போராடியவர்களில் அன்னை பூபதியின் தியாகம் வித்தியாசமானது.

அகிம்சையின் பிறப்பிடமாகிய இந்தியாவுக்கு அகிம்சையை எடுத்துக்காட்டியவர். இனவாத அரசும், இந்திய வல்லாதிக்கமும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் எனக் கூறி, தமிழ் மக்களுக்கு எதிராகவும், அவர்களது அபிலாஷைகளைத் தடுக்கும் வகையிலும் தமிழ் மக்கள் மீது 1987 - 10 -12 ஆம் திகதி அன்று திருநெல்வேலிப் பகுதியில் இந்திய இராணுவம் பல தமிழ் மக்களை படுகொலை செய்தது.

இதே போன்று தமிழ் மக்கள் மீது பல்வேறு தாக்குதல்களை மேற்கொண்டனர். விடுதலைப்போராட்டம் முகிழ்த்துக்கொண்டிருந்த காலப் பகுதிகளில் இருந்து எமது தேசவிடுதலைக்குப் பக்க பலமாக நின்று பல்வேறு வழிகளிலும் வலுச்சேர்த்தவர்கள் நாட்டுப்பற்றாளர்கள். அந்த வகையில் நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் தியாகமும் அளப்பரியது என அவர் மேலும் தெரிவித்தார்.

நவம் அறிவுக்கூட வளாகத்தில் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை நவம் அறிவுக்கூட பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை நிர்வாக ஆளுகைப் பொறுப்பாளர் இளங்கீரன் ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை வித்தகி ஏற்றிவைத்து, மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து போராளிகளின் கலை நிகழ்வு, சிறப்புரை என்பன நடைபெற்றது.

# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு 14 கோடி ரூபா மட்டுமே செலவு!

கிளிநொச்சி—

இராணுவத்தினரின் போர் நடவடிக்கை மூலம் முற்றாக அழிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக 14 கோடி ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் பாடசாலைகள், முன்பள்ளிகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பொதுமக்களின் வீடுகள் எனப் பல்வேறு கட்டடங்கள், பொதுமக்களின் சொத்துக்கள், பயன்தரு மரங்கள் என பெறுமதி மதிப்பிட முடியாத சொத்தழிவுகள் படையினரால் ஏற்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் தற்பொழுது சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் என 44 நிறுவனங்களின் மூலம் 14 கோடி ரூபா நிதியே இதுவரை செலவிடப்பட்டுள்ளதாக மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகின்றது.





கிளிநொச்சி - கனகபுரம் மகாவித்தியாலயத்தில் தமிழீழ சுகாதார சேவையினரால் காசநோய் தொடர்பான கண்காட்சி நிகழ்வில் - கண்காட்சி மண்டபத்தை புலிகளின் குரல் பொறுப்பாளர் நா. தமிழன்பன் நாடாவை வெட்டித்திறந்து வைப்பதையும், தமிழீழ சுகாதார சேவையினரால் காசநோய் தொடர்பாக விளக்கமளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# வன்னிப் பிரதேசமெங்கும் அன்னைபூபதி நினைவுதினம்!

பூநகரி—

இந்திய வல்லாண்மைக்கு எதிராக இரண்டு அம்சக் கோரிக்கையை முன்வைத்து ஈகச் சாவெய்திய தியாகி அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

வவுனியா - புளியங்குளம் மாவீரர் மண்டபத்தில் இளையோர் செயலணித் தலைவர் வினோத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை மாவீரர் லெப்டினன்ட் நிலவனின் தாயார், கிராம அபிவிருத்திச் சங்கப் பொறுப்பாளர் கந்தசாமி ஆகியோர் எற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை புளியங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் சித்திரன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை வவுனியா மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பிறைசூடி ஏற்றி வைக்க, மலர்மாலையை புளியங்குளம் மாதர் சங்கத் தலைவி அணிவித்தார்.

நினைவுரைகளை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா நிகழ்த்தினார்.

❖ ❖ ❖

வவுனியா- கனகராயன் குளப்பிரதேசத்தின் பொதுநோக்கு மண்டபத்தில் புளியங்குளப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் முல்லைமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை கிராம அலுவலர் தணிகாசலம் எற்றி வைத்தார். தமிழீழ தேசியக்கொடியை கனகராயன்குளப் பிரதேச மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் இளநிலா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை கனகராயன்குள வர்த்தக சங்கத் தலைவர் ஏற்றிவைக்க, மலர்மாலையை கனகராயன்குளம் வடக்கு மாதர் சங்கத் தலைவி அணிவித்தார்.

தொடர்ந்து அகவணக்கம் மலர் அஞ்சலி, நினைவுரைகள் என்பன இடம்பெற்றன. இந்த நிகழ்வில் நினைவுரைகளை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், கிராம அலுவலர்கள் மற்றும் பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

❖ ❖ ❖

மன்னார் - பண்டிவிரிச்சானில் 16 வீட்டுச்சந்தியில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு நிகழ்வில் -

பொதுச் சுடரை இரண்டு மாவீரர்களின் தந்தையாரான முனீஸ்வரன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த ராங்கன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப் பட்டத்துக்கான ஈகச்சுடரை பண்டிவிரிச்சான் ஊரக மேம்பாட்டுச் செயலகத் தலைவர் வர்த்தக சங்கத் தலைவர், மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மலர் மாலையை திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த ஈழப்பிரியன் அணிவித்தார். தொடர்ந்து வணக்க உரைகள் இடம்பெற்றன.

❖ ❖ ❖

முல்லைத்தீவு - மாங்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் புஸ்பமாலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை மாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தின் பொறுப்பாளர் வளவன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மாங்குளம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை ஊரக எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவானந்தன் ஏற்றிவைக்க, மலர் மாலைகளை மாங்குளம் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் திருச்செல்வம், மாங்குளம் மாதர் சங்கத் தலைவி ஜானகி ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து நிகழ்வின் சிறப்புரையை சரவணன் நிகழ்த்தினார். (பூ)

# வர்த்தகர்கள் மீதான தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்!

## வவுனியா அரசியல்துறை பொறுப்பாளர் ஞானம்

வவுனியா—

வர்த்தகர்கள் மீது தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் தாக்குதல்களை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

வவுனியா மாவட்ட அரசியல்துறையினருக்கும், இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் வவுனியா மாவட்ட தலைவருக்குமிடையிலான சந்திப்பு புளியங்குளத்திலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது வர்த்தகர்கள் மீது தொடரும் தாக்குதல் குறித்து ஆராயப்பட்டது.

வர்த்தகர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்தால், எதிர்காலத்தில் ஜெனிவா பேச்சுக்களை அது பாதிக்கும்.

எனவே, இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு வின் வவுனியா மாவட்ட அதிகாரியிடம் கோரிக்கை விடுத்தார்.

## ஆணையாளர் இன்றி மாவட்ட செயலகம்!

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரை நியமிக்காததால் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை பெறுவது, புதிய வாகனங்களை பதிவு செய்வது, போன்ற விடயங்களில் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் இந்த பிரதேச மக்கள் பல கிலோ மீற்றர் தூரம் கடந்து யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்ட செயலகங்களுக்கு சென்று தமது வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தை பெறவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதையடுத்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரை நியமிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (09)

## நீர் வெறுப்பு நோயால் மாணவன் பாதிப்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சி 55 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த மாணவன் நீர் வெறுப்பு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தரம் 8 மாணவனாகிய அ.மோகலாஸ் (வயது13) என்பவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் நாய்க் கடிக்குள்ளானார். இவர் முதலாவது சிகிச்சை பெற்றபோதும், தொடர்ந்து சிகிச்சை பெறாமையால், நீர் வெறுப்பு நோய்க்குள்ளாகியுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (09)

# லாலா பயிற்சிப் பாசறையில் தற்காப்பு பயிற்சி நிறைவுவிழா

முழங்காவில்—

கிளிநொச்சி - முழங்காவில் லாலா பயிற்சிப் பாசறையின் தற்காப்புப் பயிற்சி நிறைவு நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது.

வனோஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, தேசியக் கொடியை முழங்காவில் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பயிற்சிகளில் மேற்கொள்ளப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான சிறப்புப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் சிறப்புரையை தமிழரசன் நிகழ்த்தினார். இந்தப் பயிற்சியில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் பயிற்சி பெற்று வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (பூ)

# கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி!

மன்னார்—

மன்னார் மாந்தை மேற்கு பாடசாலைகளுக்கு இடையிலான கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி கடந்த புதன்கிழமை பெரியமடு மகாவித்தியாலயத்தில் - மாந்தை மேற்கு கோட்டக் கல்வி அதிகாரி எமிலியாம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட ஊரக வளர்ச்சிப் பணியைச் சேர்ந்த ஜெயம் ஏற்றிவைத்தார்.

விளையாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து, இந்த நிகழ்வில் - கருத்துரைகளை மடு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மரியாம்பிள்ளை, மடு வலய கல்விப் பணிப்பாளர் தேவேந்திரம், மடுக் கோட்ட ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் தென்றல்மாறன், தமிழீழ ஊரக வளர்ச்சிப்பணிப்பொறுப்பாளர் கந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

(கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு:
அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.
- திருக்குறள்

## நமது நோக்கு

# சாத்தியமற்ற சட்டங்கள்

கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் நுளம்புப் பெருக்கத்துக்கு காரணமாக இருக்கும் கழிவுகள் தேங்கும் இடங்களின் உரிமையாளர் மீது 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கட்டுப்பாடின்றிப் பெருகியுள்ள நுளம்பைக் கட்டுப்படுத்த சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முனைகிறது. மலத்தியோன் மருந்து விசிறுவதன் மூலம் நுளம்புகளைக் கட்டுப்படுத்தலாம் என்ற காலம் மாறிவிட்டது.

இப்போது அதைவிட செயற்திறனும், நச்சுத்தன்மையும் கூடிய மருந்துகளுக்குக் கூட நுளம்புகள் கட்டுப்படுவதாக இல்லை. இதனால் நுளம்புகள் பல்கிப்பெருகி நோய்களை ஏற்படுத்துவது ஒருபுறமிருக்க, இன்னொரு புறத்தில் நுளம்பைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு விசிறும் மருந்துகளால் மனிதர்களிடையே நச்சுப் பொருட்கள் பரவுகின்றன.

இன்றைய நவீன உலகுக்கு சவால்விடும் எயிட்ஸ் போன்ற எத்தனையோ விடயங்களில் நுளம்பும் ஒன்று. நுளம்பை அழிப்பதற்கான தேசியக் கொள்கை உருவாக்கிய காலம் போய், சர்வதேச கோட்பாடு உருவாக்கப்பட்டாலும் அது சாத்தியப்படுவதாக இல்லை.

இந்த நிலையில் தான் இலங்கை அரசு நுளம்புப் பெருக்கத்துக்கு வாய்ப்பான கழிவு நீர்நிலைகள், குப்பை கூழங்களைக் கொண்டிருப்போர் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருக்கிறது.

ஆனால், அது சாத்தியப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதே. ஏனென்றால், இலங்கையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் நுளம்புகள் எங்கே பெருக்கமடைகிறது என்பது தெரிய வேண்டும்.

அப்படித் தெரிந்தாலும் கூட பண பலத்தின் மூலம் சட்டத்தின்முன் நிறுத்தப்படாமல் - நுளம்புகளின் சக்திக்கு வலுவூட்டப்பட்டுவிடும் என்பதில் எந்தச் சந்தேக மும் இல்லை.

எனவே, சட்டத்தின் மூலம் நுளம்புப் பெருக்கத்தைத் தடுத்து விடலாம் என்ற அரசின் கனவு பகல் கனவாகவே முடிந்துவிடும். நுளம்பினால் ஏராளமான நோய்கள் பரவுவது உண்மையாயினும், அதைக் கட்டுப்படுத்த சட்டங்களும், தண்டனைகளும் உதவுமா என்பது கேள்விக் குறியே.

இப்படித்தான் பாதீனியம் என்ற செடியை அழிக்காமல் தமது நிலப்பரப்பில் விட்டு வைப்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா முதல் ஒருலட்சம் ரூபா வரை அபராதம் அல்லது சிறைத்தண்டனை விதிக்க சில ஆண்டுகளுக்கு முன்னர் அரசு சட்டமியற்றியதாக ஞாபகம்.

இந்தியப் படைகளின் வரவுடன் இலங்கையில் கால் வைத்த பாதீனியம்செடி யாழ்ப்பாணத்தில் பெரும் பிரதேசங்களை இன்னும் ஆக்கிரமித்து நிற்கிறது. இந்தச் செடியால் ஏற்படும் இழப்புக்கள் ஏராளம்.

இதனால்தான் அரசு சிறைத்தண்டனை, அபராதம் என்று சட்டம் கொண்டு வந்தது. சட்டம் கொண்டு வந்து இன்று ஆறு ஆண்டுகளாகிவிட்டன. அப்போது பாதீனியம் ஒழிப்பு ஒரு பெரும் பிரசாரமாக்கப்பட்டது.

ஆனால், இப்போதும்கூட பாதீனியம் ஒழிக்கப்படவில்லை. பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை. வலி.கிழக்குப் பிரதேசத்தில் செழிப்பு மிக்க தோட்டங்களை பாதீனியச்செடிகள் ஆக்கிரமித்து நிற்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், பாதீனிய ஒழிப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய அரச அலுவலகங்களிலேயே பாதீனியச் செடிகள் காணப்படுகின்றன.

பிரதேச செயலகங்களோ, பிரதேச சபைகளோ பாதீனிய அழிப்பில் நாட்டம் காட்டுவதில்லை.

இதன் விளைவு அடுத்த சில வருடங்களில் தெரியும். இதேபோல் சிறைத்தண்டனை, அபராதம் என்று பாதீனியத்துக்கு எதிராகச் செயற்பட மறுப்போருக்கு தண்டனைகளை அமுல்படுத்திய அரசே இந்த நடவடிக்கையில் இறங்கவில்லை.

அப்படித்தான் நுளம்புகளை ஒழிப்பவர்கள் என்ற பெயரில் நுளம்புப் பெருக்கத்துக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து அபராதம் விதிக்கும் சட்டமும் பயனளிக்கப்போவதில்லை.


இத்தகைய சட்டத்தினூடே நுளம்புகள் மட்டும் நுழையப்போவதில்லை. குற்றவாளிகளும் நுழைந்து தப்பிவிடுவார்கள். எனவே, இந்த நுளம்பு ஒழிப்பானாலும், பாதீனிய ஒழிப்பானாலும் சரி அரசு சட்டங்களைப் போடுவதுடன் நின்று விட்டால் எதுவுமே நடக்காது.

அந்தச் சட்ங்களை நடைமுறைப்படுத்தச் சாத்தியமான வழிமுறைகளை ஆராய்வதும் மக்கள் விருப்புடன் அதில் பங்களிப்புச் செய்வதற்கான வழிவகைகளைத் தேடுவது தான் சரியான வழியாக இருக்கும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்

செய்தி:- 40 ஆயிரம் படையினரின் சடலங்கள் கொழும்பு வந்தால் கொழும்பிலுள்ள 4 லட்சம் தமிழர்களையும் சவப்பெட்டிகளில் அனுப்புவோம் -
-சம்பிக்க ரணவக்க




# பேச்சுப் பேச்சென்று இதுவரை பேசி கண்டபயன் எதுவுமில்லையே!

## ஊர்சுற்றியார் எழுதுவது

ட்ரோலரும் டோராவும் வெடித்துச்சிதறியிருக்கின்றன. இதன் எதிரொலி வெடிக்குமா? பேச்சுப் பேச்சென்ற பேச்சு தொடருமா? நடக்குமா? நிற்குமா? பரதேசியார் இப்படிக் கேட்டார்.

அவநம்பிக்கையும் அச்சமும் நீக்கும்போது பேச்சு பேச்சென்று பேசுவதில் என்ன பயன் என்றேன்.

எந்தக் காலத்திலாவது தமிழனுக்குரிய அந்தஸ்துக் கொடுத்து சமாதானமாக வாழ வேண்டும், தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசத்தில் செழிப்புற வாழ்ந்து, சிங்கள மக்கள் தமது பகுதியில் சமதையாக வாழவேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் நினைத்துச் செயல்பட்டதுண்டா? செயல்பட்டதாகக் கேள்விப்பட்டதுண்டா? இப்படி கேட்டுக்கொண்டு வந்தமர்ந்தார் நண்பர் பரதேசியார்.

இந்தச் சந்தேகம் இப்பொழுது உமக்கு ஏற்பட்டிருப்பது நியாயம்தான். எந்தக் காலத்திலுமே தமிழ் மக்களின் முன்னேற்றத்தில் அவர்களுக்குக் கொஞ்சம் பொறாமை இருந்து வந்திருப்பது உண்மைதான். வெள்ளைக்காரன் காலத்தில் ஆங்கிலக் கல்வியில் தமிழர்கள் நன்கு புலமை பெற்றிருந்தார்கள். அரசாங்கத்தில் உயர் பதவிகளுக்கு நடந்த போட்டிப் பரீட்சைகளில் தமிழர்கள் சித்தியடைந்து அந்தப் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். கிளார்க் வேலைகளுக்கும் தமிழர்களே பெருமளவில் பரீட்சைகளில் சித்திபெற்றுத் தெரிவானார்கள். உத்தியோகத்தில் மட்டுமல்ல சட்டத்துறையிலும் தமிழர்களே சிறந்த சட்டத்தரணிகளாகவும் விளங்கினார்கள். நீதிபதிகளாகவும் பலர் பதவி உயர்வு பெற்றார்கள். வெள்ளையர்கள் தமிழர்களின் ஆற்றலையும், அறிவையும், கடமையில் அவர்கள் காட்டும் விசுவாசத்தையும் பார்த்து அவர்களுக்குப் பதவி உயர்வும், சலுகைகளும் வழங்கினார்கள். இது சிங்களத் தலைவர்கள் மத்தியில் மட்டுமல்ல பொதுமக்கள் மத்தியிலும் பொறாமையை ஏற்படுத்தியது என்று சொன்னேன்.

இதன் விளைவுதான் சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி என்ற சட்டம் வரவும், அதைத் தொடர்ந்து தமிழர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற மனப்பான்மை விரிவடையவும் காரணமாயிற்று. தமிழர்கள் சிலரின் அறிவையும், ஆற்றலையும் சிங்களத் தலைவர்கள் கூட தங்கள் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தினர். அடங்காத் தமிழன் என்று அழைக்கப்பட்ட பேராசிரியர் செ.சுந்தரலிங்கத்தை இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி.எஸ்.சேனநாயக்க நன்கு பயன்படுத்திக் கொண்டார். உணவில் தன்னிறைவு என்ற பெயரில் விவசாயத்தை விருத்தி செய்வதாகச் சொல்லி கிழக்கு மாகாணத்தில் அல்லை, கந்தளாய், கல்லோயாக் குடியேற்றத்திட்டங்களை உருவாக்கி சிங்களவர்களை இந்தப் பகுதிகளில் திட்டமிட்டுக் குடியேற்றுவதற்கு சுந்தரலிங்கம் நல்ல ஒத்துழைப்பும் கொடுத்தார். பின்னர் சுந்தரலிங்கத்துக்கு தெரியாமலேயே அவருடைய வவுனியாத் தொகுதியை அடுத்து பதவியாக் குடியேற்றத்தை உருவாக்கி சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றினார்கள் என்று பரதேசியார் சொன்னார்.

தமிழர்கள் உயர் பதவிகளில் இல்லாமல் பார்த்துக் கொள்வதில் சிங்களத் தலைவர்கள் பின்னர் இனவாதத்தைப் பின்பற்றத் தொடங்கினர். பிரதம நீதியரசர் பதவியில் செ.நாகலிங்கம் நிரந்தரமாக இருக்கத் தகுதியிருந்தும் தற்காலிகமாகவும் பதில் பிரதம நீதியரசராகவுமே வைத்திருந்தனர். கவர்னர் ஜெனரலாக மிகக் குறுகிய காலமே செ.நாகலிங்கம் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டார். தமிழர்களுக்கெதிரான துவேஷம் படிப்படியாக வளர்ந்து 1956 தொடக்கம் 1983 வரை பெரும் இனக்கலகங்களாகவும் வெடித்தன. இந்தக் கலகங்களைத் தூண்டிவிட்டு தமிழ் இனப்படுகொலையைத் தொடரலாமென்று சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்டுச் செயற்பட்டனர். தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி எதிர்த்துப் போராடத் தொடங்கியதால், இன ஒழிப்பை வெற்றிகரமாக நிறை வேற்ற முடியாமல் போய்விட்டது. உலகில் பயங்கரவாத இயக்கங்கள் தோன்றியதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்களின் விடுதலைப் போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் பயங்கரவாத இயக்கங்களுடன் சேர்த்து அழித்து விடுவதற்குத் திட்டமிட்டு, உலக நாடுகளில் பிரசாரத்தை முடுக்கி விட்டனர். இந்தப் பிரசாரத்தின் தொடக்கத்தில் சில நாடுகள் எடுபட்டு விடுதலைப் புலிகளையும் பயங்கரவாத பட்டியலில் சேர்க்க முனைந்தன. ஆனால் என்ன தான் திட்டமுடன் பிரசாரங்களைச் செய்தாலும் உலக நாடுகள் உண்மையை அறிந்து கொண்டன. பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்த நாடுகள் அதைப் பின்னர் திரும்பப் பெற்றன என்றா லும் சிங்களப் பேரினவாதிகளும் அவர்களுடைய ஊடகங்களும் தமிழர் என்று சொல்லப்படும் சிலரையும் தம்வசம் வைத்து இன்றும் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவும் விடுதலைப் புலிகளின் இயக்கத்துக்கு எதிராகவும் உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்து கொண்டுதானிருக்கின்றனர் என்று நான் சொன்னேன்.

இலங்கையில் தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலத்திலே கூட அந்த மன்னர்களுக்கு எதிரான படையெடுப்புக்களுக்கும் அந்த மன்னர்கள் வீழ்ச்சியடைவதற்கும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களே காரணமாகவும், உடந்தையாகவும் இருந்திருக்கிறார்கள். இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் பெரும் தியாகங்கள் புரிந்து பெருமளவில் வெற்றிபெற்றிருக்கிறது. தமிழீழம் முழு விடுதலை பெற்று உலகிலேயே ஒரு தமிழ் அரசு சுதந்திரமாகத் தலை நிமிர்ந்து நிற்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இது கண்டு சிங்களவர்கள் கோபம் கொள்வதிலும் எதிர்த்து நிற்பதிலும் நியாயமிருக்கிறது. ஆனால் சுதந்திரத் தமிழீழம் உதயமாகக் கூடாதென்று சிங்கள இனவெறி யர்களுக்கு உடந்தையாக நிற்கும் தமிழர்களை என்னவென்று சொல்வது? தமிழீழம் மலரட்டும். அதன் பிறகு ஜனநாயகம் எப்படிச் செயல்படுகிறதென்று பார்ப்போம். இப்பொழுது ஜனநாயகம் பற்றிப் பேசுவோர் எந்த ஜனநாயகம் பற்றிப் பேசுகிறார்கள். இலங்கையிலும் ஜனநாயகத்தின் பெயரால் தானே தமிழர்கள் பட்டப்பகலிலேயே வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டார்கள். ஜனநாயகத்தின் பெயரால் இன்னமும் அட்டூழியங்கள் தொடர வேண்டுமா? என்று பரதேசியார் கேட்டார்.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ முடியுமென்று இனி எவர் சொன்னாலும் அதை ஏற்க முடியாது. அது நடைபெறக்கூடியதுமல்ல.

சமாதானப் பேச்சு என்று காலத்துக்குக் காலம் கூடிப் பேசுவதும் பின்னர் பழையபடி தமிழ் மக்களைப் பழிவாங்குவதும் இனியும் தொடரக் கூடாது. இனியும் பேச்சு என்பது பித்தலாட்டமாகவே இருக்கும். சிங்கள அரசியல்வாதிகளில் ஆட்சிபீடத்திலிருப்பவர்கள், எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் மட்டுமல்ல, வீதியில் நிற்பவர்களும் சரி, பாதுகாப்புத்துறையிலும் மற்றும் சகல துறைகளிலும் உயர் மட்டத்திலிருக்கும் சிங்களவர்களும், தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு அனுமதிக்க மாட்டார்கள். பேச்சு என்பது ஏமாற்று வேலையாகவே இருக்கும். இனிப் பேசுவதென்பது தமிழீழத்தின் எல்லைபற்றிப் பேசுவதாகவே இருக்க வேண்டும் என்று நான் சொன்னேன்.

மெத்தச் சரியென நடந்தார் பரதேசியார்.

# செய்வார்களா பொலீஸார்?

## வாசகர் நோக்கு

இராஜவீதியில் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வீதித்தடைகள் போடப்பட்டன.

மிகவும் உயரமான மண் அணைகளைப் போட்டு பொலிஸார் தமக்குப் பாதுகாப்புத் தேடிக்கொண்டனர். அப்போது நிலவிய அசாதாரண சூழல் காரணமாக எவரும் வாய்திறக்க முடியாதிருந்தது.

ஆனால், இப்போது அப்படிப் பட்ட அசாதாரண நிலை இல்லை. ஆனாலும் அப்போது போடப்பட்ட மிக உயரமான மண் அணையுடன் கூடிய வீதித்தடை - இந்த வீதியால் செல்லும் பஸ் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக இருக்கிறது.

ஒன்றுக்கு நான்கு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த வீதித்தடைகள் தனியே மண்ணால் மட்டும் அமைக்கப்படவில்லை. கூடவே கூரிய கற்களும் முட்களுமாகக் காணப்படுகின்றன.

இதனால் வாகனங்களின் ரயர்கள் பாதிப்படைவதுடன் அடிக்கடி காற்றுப் போய் உருட்டிச் செல்லவேண்டியும் நேரிடுகிறது.

வீதி ஒழுங்குமுறைகள் குறித்து மீண்டும் நடவடிக்கையில் இறங்கப்போவதாக அறிவித்துள்ள பொலிஸார் - வாகனசாரதிகளுக்கு தம்மால் எற்படும் இப்படிப்பட்ட இடையூறுகளை முதலில் களைவது தானே முறை.

செய்வார்களா அவர்கள்?

அச்சுவேலி

ரஞ்சன்

# நோர்வேயின் விசனம் !

தற்போதைய இலங்கை அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே அரசாங்கம் கடும் அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.



கடந்த பெப்ரவரி மாதம் ஜெனிவா நகரில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் பிந்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளே, நோர்வேக்கு மீதான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டதிலிருந்து 2003 ஆம் ஆண்டு சமாதான பேச்சுக்கள் தடைப்பட்ட போதும் கூட, அதற்குப் பிந்திய காலப்பகுதியில் பல தடவை சமாதான முன்னெடுப்புகளில் பின்னடைவு ஏற்பட்ட போதிலும் கூட நோர்வே அரசு இப்படியான அதிருப்தியைத் தெரிவிக்கவில்லை.

2004 ஆம் ஆண்டு இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவரான எரிக் சொல்ஹெய்மை வெள்ளைப் புலி என்று கூறி அவரது சமாதானப் பணியை அவமதித்த போது கூட, நோர்வே தரப்பிலிருந்து இவ்வாறான கருத்துக்கள் கூறப்படவில்லை. தொடர்ந்தும் பொறுமை காத்தே வந்தது.

தற்போது ஜெனிவாப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டவற்றை - இலங்கை அரசு , நடைமுறைப் படுத்தாது பல்வேறு புரளிகளைக் கிளப்பிவிட்டு, அரசியல் பல்டி அடித்து வருகிறது.

இந்த நிலையில்தான் அரச பேச்சுக் குழுத்தலை வரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட எரிக் சொல்ஹெய்ம் தமது அரசாங்கத்தின் அதிருப்தியை வெளியிட்டிருக்கிறார். எனினும் அவர் நோர்வே பற்றியும், அதன் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பற்றிப் பல்வேறு வதந்திகளையும், அகௌரவங்களையும் தென்னிலங்கைப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்தாலும் அது பற்றி அதிகம் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களைவதாக ஜெனிவாவில் இணக்கம் காணப்பட்டும் - இதுவரை அது தொடர்பான எந்த நடவடிக் கையையும் மேற்கொள்ளாத இலங்கை அரசு, அவ்வாறான ஆயுதக் குழுக்கள் தம்மிடம் இல்லை என்றும் கூறிவருகிறது.

அத்துடன் ஜெனிவாவில் வைத்து ஆயுதக் குழுக்கள் பற்றிய விபரப் பட்டியல் புலிகளின் பிரதிநிதிகளால் வழங்கப்பட்டபோது - வாயடைத்துப் போயிருந்த அரச குழுவினர் - இங்கு வந்து மறுதலிக்கின்றனர்.

மேலும் அதிதீவிர ஆயுதக் கொள்வனவிலும் கூட்டுப் போர் பயிற்சியிலுமே இலங்கை அரசு கவனம் செலுத்தி வருகிறது.

சுதந்திரத்துக்காகப் போராடிய ஒரு விடுதலை அமைப்பின் கைகளைக் கட்டி விட்டு, பேரினவாத அடக்கு முறை அரசு இவ்வாறான யுத்த முஸ்தீபுகளை முன்னெடுப்பதை ஒரு நேர்மையான, நடுவு நிலைமையான சமாதான அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வேயால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இது தவிர, எப்போது முறிந்து விழும் என்று எதிர்பார்த்திருந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பேணுவதற்கு நோர்வே மேற்கொண்ட முன்னெடுப்புகள் வெற்றி பெறக்காரணம் விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடுப்புத்தான் என்பதை நோர்வே நன்கறியும்.

எனவே, இலங்கை அரசின் கபடத்தனங்களுக்கு விடுதலைப் புலிகளால் எழுப்பப்படக்கூடிய கேள்விகளுக்கு அனுசரணையாளர் என்ற வகையில் பதிலளிக்க முடியாத நிலை தோன்றியிருப்பதையே நோர்வேயின் இந்த அதிருப்தி வெளிப்படுத்துகிறது.

ஜெனிவா சென்ற புலிகள் பிரதிநிதிகளுக்கு ஒஸ்லோவில் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டதாகவும், நோர்வே அரசு தனித்தமிழீழம் உருவாக்குவதற்கு முயற்சிப்பதையும், புலிகளின் உறுப்பினர்களுக்கு விமானப் பயிற்சி அளிப்பதாகவும், சமாதானப் பேச்சுக்குச் சென்ற புலிகள் பிரதிநிதிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கியதாகவும் கூட ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்றன காட்டுக் கூச்சல் போட்டு வருகின்றன.

நோர்வே தரகர்களை வெளியேற்ற வேண்டும் என பிக்குகள் முன்னணியும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற போர்வையில் மகிந்தவின் - மறைமுக உந்து சக்திகள் தொடர் போராட்டங்களில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளன.

அதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை தேசிய பிக்குகள் முன்னணித் தலைவர் தம்பர அமில தேரர் தலைமையிலான பிக்குகள் குழுமம் விகாரமாதேவி பூங்காவில் ஒன்று கூடி தமது தொடர் போராட்டத்தின் அடையாளமாக - இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் நோர்வே தமிழீழத்தை புலிகளுக்கு வழங்க முனைகிறது என்றும், சமாதான இராஜதந்திர உறவுகளின் எல்லைக் கோட்டை மீறிவிட்டது என்றும் நோர்வேத் தூது வரை உடன் அகற்றுமாறும் கோசங்கள் எழுப்பியவாறு நோர்வே தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவை சமாதானத்துக்கு வேட்டு வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தனை நர்த்தனங்களை ஆடி வரும் நிலையிலும் கூட - ஜனாதிபதி மகிந்த வாய்மூடி மௌனியாக இருப் பது பெரும் சந்தேகத்தை மட்டுமல்ல, அவருடைய சமாதான முயற்சிகள் தொடர்பாக தமிழ் மக்கள் மட்டுமன்றி நோர்வே கூட சந்தேகம் கொள்வது தவிர்க்க முடியாததாகிறது.

பேரினவாதிகள் எவ்வளவு தூரம் கொக்கரித்தாலும் - இறுதியில் புலிகளின் மௌனத்துக்கும், பொறுமைக்கும் முன்னால் மண்டியிட்டு கிடப்பது வழமை. இதுவே ஜெனிவாவிலும் நடந் தேறியது.

இன்னும் மகிந்தவின் கூட்டணிக் கட்சிகளான ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் சமஷ்டி என்ற கருத்துக்கே இடமில்லை என்றும் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்றும் கூறி வருகின்றன.

ஒற்றையாட்சித் தீர்வு என்றும், 4 லட்சம் தமிழர்களின் சவப்பெட்டிகளை கிளிநொச்சி அனுப்புவோம் என்றும் காயை நகர்த்தப் புரியாத, கடும்போக்கு பேரினவாதிகள் தென்னிலங்கையில் பேடித்தனமான கருத்துக்களை கூறி வருகின்றனர்.

வரலாறோ, புராணக்கதைகளே செல்லுபடியாகாத இந்த கள யதார்த்த காலத்தில் பழைய திரிபுபடுத் தப்பட்ட மகாவம்ச கருத்துகளை கழுத் தில் கட்டிக்கொண்டு ஆடுகின்றன.

இலங்கை அரசின் சமாதான முன்னெடுப்புகள் மீது நோர்வே பொருத்தமான நேரத்தில் தான் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஏனெனில், இதன் மூலம் ஜனாதிபதியின் 3 முகங்கள் வெளிப்பட்டுள்ளன. தான் சமாதானத்தின் மீது ஆத்மார்த்தமாக பற்றுக் கொண்டவர் போல் நடிக்கும் மகிந்த - ஒரு புறத்தில் தமிழ் துணை ஆயுதக் குழுக்களை அரவணைத்து வைத்துக் கொண்டு - சமாதான முன்னெடுப்புகளை தமிழ் ஆயுதக் குழுக்கள் தான் குழப்புகின்றன என்றும், தாக்குதல்கள் யாவும் புலிகளின் பகுதிகளிலேயே நடப்பதால் தமக்கும் துணைப்படைக்கும் தொடர் பில்லை என்று தனது அமைச்சர்கள் மூலம் சொல்ல வைக்கிறார்.

அடுத்து , ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற பேரினவாத, தேரவாத சிந்தனைகொண்ட சக்திகளைத் தூண்டிவிட்டு சமாதானத்தை மழுங்கடிக்கும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளார். இவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக தெரிவிக்கையில் அவை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி கள், அவை எதையும் பேசலாம் என்று கூறுகிறார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட பலத்தை சிங்கள மக்கள் அவருக்கு வழங்கியுள்ள நிலையில் - அப்பாவி ஏழைச் சிங்கள இளைஞர்களை பலிக்கடாவாக்கும் அந்தச் சக்திகளின் நடவடிக்கைகளை தடுக்க முடியாதது ஏன்?

எனவே, ஜனாதிபதியின் இவ்வாறான கூற்றுக்களும் அவரது கூட்டாளிகள், அமைச்சர்களின் அரசியல் சுயநலப் பல்டியுமே நோர்வேயின் விசனத்துக்கு முக்கிய காரணம்.

தொடர்ந்தும் தமிழ் மக்கள் அழிக்கப்படுவதை தமிழர் தலைமை பொறுத்துக் கொண்டிருக்கமாட்டாது என்பதை புரிந்து கொண்ட நிலையில் தான் இந்த நிலைக்கு நோர்வே வந்துள்ளது.

ஏனெனில், கடந்த மாவீரர் நாள் உரையில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - 'மகிந்தவின் நகர்வுகளை சிறிது காலம் பொறுத்திருந்து பார்ப்போம்' 'வரையறுக்கப்பட்ட குறுகிய காலத்துக்குள் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை திருப்தி செய்யும் வகையில் நியாயமான தீர்வுத் திட்டத்தை புதிய அரசு முன்வைக்க வேண்டும்...' 'கடும் போக்கைக் கடைப்பிடித்து காலத்தை இழுத்தடிக்க மகிந்த அரசு முயலுமானால், எமது மக்களுடன் இணைத்து சுயநிர்ணய உரிமைப் போரை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்...' என இடித்துரைத்த கருத்துக்களை பேரினவாத அரசு இனியும் அசட்டை செய்ய முடியாது.

பெப்ரவரிப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு முன்னர் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை நிறைவேறாத நிலையில் தான் விட்டுக்கொடுப்புகளுக்கு மத்தியில் புலிகளின் குழு ஜெனிவா சென்றது. எனினும், அங்கு காணப்பட்ட இணக்கப்பாடு கூட இன்னமும் திரும்பிப் பார்க்கப்படாத நிலையில் - அரசு ஆயுதக் கொள்வனவில் தீவிர கவனம் காட்டத் தொடங்கியுள்ளது.

எனவே, புலிகளும் படைவலுச் சமநிலையைப் பேணவேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகியுள்ளது.

இதனையடுத்தே ஐரோப்பிய ஒன்றியம் ஜெனிவா இணக்கப் பாடுகளை உடன் அமுல்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்துக்கு காட்டமான அறிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் தான் ஜனாதிபதி - துணை ஆயுதக் குழுக்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவோ, தடுத்து நிறுத்தவோ முடியாத நிலையில் - மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான இலங்கை அரசின் அசண்டையீனமான அரசியல் நகர்வுகளால் - நோர்வே பொறுமையிழந்து போய் நிற்கிறது. தமிழர் தரப்பின் பொறுமையைச் சேதிப்பது தமிழீழம என உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடுதான் நோர்வேயின் இலங்கை அரசு மீதான விசனம் எனலாம்.

**விஜயன்**

# சோகத்துக்கு முடிவில்லையா?

வடமராட்சி, குடத்தனை, மணற்காடு இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் தற்போதைய நிலை பற்றியும், எதிர்காலத் தேவை பற்றியும் கேட்டு அறிந்தவற்றை பேனாவின் உதவியால் அனைத்து மக்களுக்கும் தெரிவிப்பதில் அவர்களின் துன்பத்தில் நாங்களும் ஒரு துளியேனும் பங்குபற்ற முடிகின்றது.

இயற்கையின் கடுங்கோபச் சீற்றத்தில் அகப்பட்ட மக்கள் அன்று முதல் இன்றுவரை 15 மாதங்களுக்கும் மேலாக தாங்க முடியாத வேதனையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வேதனை இன்னும் எத்தனை ஆண்டுகள் நீடிக்கப் போகிறது. இதற்கு முடிவில்லையா?

2005 டிசம்பர் 26ஆம் திகதி உருவான இயற்கையின் கோரமான உதைப்பால் உறவுகள், வீடுகள், பொருட்கள் என அனைத்தையும் இழந்து விட்ட மக்கள் இன்று சொல்ல முடியாத பல வசதியீனங்களின் மத்தியில் தமது வாழ்க்கைப் படகைச் செலுத்துவதை அநேகமானோர் அறியாதுள்ளனர். தலையிடியும், காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும் என்பார்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் (UNHCR) தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) அக்ஷன் பாம் (ACTION FAIM) போறூட் (FORUT) போன்ற தொண்டு நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஏறக்குறைய 15 அடி சுற்றளவு கொண்ட சிறிய தற்காலிக கொட்டகைக்குள் ஏதோ வாழ்கிறோம் என்ற எண்ணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு முன்னைய நிம்மதியான வாழ்வு திரும்புவது எப்போது?

தகர கூரைகளாலும், பிளாஸ்ரிக் துணிகளால் சுவர்போல மறைக்கப் பட்டதுமான குருமணல் பிரதேசத்தில் மரநிழல்கள் அற்ற வனாந்தர வெட்ட வெளியில் கடந்த 15 மாதங்களாக சீவியத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் இந்த மக்கள் தாம் நாளாந்தம் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றிக் கூறுகிறார்கள்.



**சவிரி மூத்து திரேசம்மா**

(பத்துப் பிள்ளைகளின் தாயார்)

என்ர பத்துப் புள்ளையள்ள இப்ப ஒண்ணு மட்டுந்தான் மிஞ்சி இருக்கு. மற்றதுகள் எல்லாத்தையும் கடல் விழிங்கியிட்டுது. றெஜினோல்ட் (18 வயது), றெரில்டா (14 வயது) றெஜிந்தன் (8 வயது) ஆகிய பேரப் பிள்ளைகள் என்னுடன் தான். அவங்கட அம்மா, அப்பாவும் செத்துப் போயிட்டுதுங்க. (அழுதுகொண்டு) ஏதோ நாங்களும் வாழுறம் எண்டு பொழுது போகுது. அரசாங்கம் நிவாரணமாக - அரிசி, சீனி, பருப்பு, மா தாறாங்க. ஆனா மீதி சாமான்கள், காய்கறி, சவுக்காரம் என்பன வாங்க கையில காசு இல்லை. ஒவ்வொருவரின் பேரிலேயும் ஏதோ பாங்கில (வங்கி) போடுறாங்களாம். பாங்கில கிடந்து என்ன பிரயோசனம். "சுவர் இருந்தா தானேங்கோ சித்திரம் வரையலாம்" அதேபோல உடம்பு நல்லா இருந்தா தானே சுகமா வாழலாம். சத்தான உணவு வாங்கி சாப்பிட கையில் காசு இல்லை. கடல்ல தொழில் செய்ய எண்டு போட் தந்தாங்க. ஆனா தொழில் செய்யக் கூடிய ஆட்கள் இல்லை.

**மேரிவினோஜா -**

இங்கே எல்லாமாக மொத்தம் 300 குடும்பங்கள் உண்டு. ஆனா 240 குடும்பங்களுக்குத்தான் சிறிய வீடு அமைத்தத் தந்துள்ளார்கள். மீதி 60 குடும்பமும் ஒரு வீட்டில் இரு குடும்பமாக சேர்ந்தே வாழ்கிறார்கள். இதனால் பல பிரச்சினைகள், கஷ்டங்கள். எமது சொந்த வீட்டைத் திருத்துவதற்கென ஒரு லட்சம் ரூபா தந்தாங்க.அந்தக் காசு வீடு திருத்தப் போதாது. உங்களின் முக்கிய எதிர்பார்ப்பு என்ன எனக் கேட்டபோது - முதலாவதாக நாங்கள் எமது சொந்த வீட்டில போயிருக்க உதவ வேணும். அப்பாவுக்கு கடல் தொழில் தெரியும். அதற்கு போட், எஞ்சின், வலை வேணும். மற்றது எங்கள்ள மொத்தம் 5 பிள்ளைகள். நாங்கள் அனைவரும் நன்றாகத் தையல் வேலை செய்வம். எங்கட வீட்டிலிருந்த தையல் மெஷினை சுனாமி கொண்டு போயிட்டுது. இப்ப தையல் மெஷின் இருந்தா நாங்கள் அதால கொஞ்சக் காசு சேர்க்க முடியும். பல தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்தும் இன்று வரை எமக்கு தையல் மெஷின் தரவில்லை. அப்படி தந்தா எங்களுக்கு ஓரளவு சுயதொழில் வருமானம் கிடைக்கும். அதுவே எமக்கு பெரிய சந்தோசமாயிருக்கும். இப்படித் தனது எதிர்பார்ப்பைத் தெரிவித்தார்.

**தேவசகாயம்பிள்ளை சாந்த அருள் பிரான்சிஸ்கா**

நான் சுனாமியால் ஊனமடைந்துள்ளேன். இதுவரை என்னை எந்த நிறுவனமும் பதியவில்லை. எனக்கு வேண்டிய உதவிகள் செய்யவுமில்லை. விதானை கூடப் பதியவில்லை என மிக்க கவலையுடன் தெரிவித்தார். ''மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல'' இவர்களின் சோகமும் தொடந்து கொண்டே செல்கிறது.

UNHCR வீட்டையும், TRO சமையல் அறையையும், ACTION FAIM மலசலகூடத்தையும், FORUT கிணறு, நீர் தொட்டி என்பனவற்றையும், அமைத்துக் கொடுத்துள்ளன. சுக வாழ்வு நிலையத் தொண்டர்கள் மன ஆற்றுப்படுத்தல் சேவையை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், திங்கட்கிழமைகளிலும் வந்து செய்து வருகின்றனர். அத்துடன் சுனாமியின் முதலாம் ஆண்டு தினத்தில் எல்லோருக்கும் மதிய உணவு வழங்கினார்கள்.

இவர்களின் இப்படியான கண்ணியமான சேவை தொடர்கின்ற போதும், அங்கு வாழும் மக்களின் மனத்தில் ஏற்பட்ட பயப்பீதி மனோ நிலை முற்றாக நீங்கவில்லை. இரவிலே பேய் உலாவுவதாகவும், கூ... கூ... என்ற சத்தம் கேட்பதாகவும் தெரிவிக்கின்றனர். நேற்றும் கூட வயது வந்த பெண்ணும், ஆணும் இரவில் பயந்து கத்தியதாகவும் மறு நாள் பாதிரியார் வந்து ஆசீர்வதித்து அதன்பின் மந்திகை ஆஸ்பத்திரி யூடாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மரநிழல்கள் எதுவுமற்ற மணல் பிரதேசத்தில் மேலும் கீழும் வெப்பத்தை உறிஞ்சியபடியே இவர்களின் வாழ்க்கை நகருகிறது. அங்குள்ள பிள்ளைகளின் பாடசாலையும் தகரக் கொட்டிலே. சிறு சிறு வியாதிகளுக்குக் கூட வைத்தியம் செய்ய டொக்டரோ, மருந்துக்கடையோ கிடையாது. இதைவிட மிக மோசமான நிலை என்னவென்றால் தற்போது மலசல கூடங்கள் பாவிக்க முடியாதவாறு நிரம்பிவிட்டன. முன்னர் அடிக்கடி சுத்தம் செய்யப்பட்டது. ஆனால், கடந்த தை மாதத்தின் பின் சுத்தம் செய்யும் பிரதேசசபையினர் வரவேயில்லை.


இதனால் பெண்கள், சிறுவர்கள் இரவில் ஏன் பகலில் கூட பற்றைகள் உள்ள இடம்தேடி நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதாகவும், அங்கு பாம்பு பூச்சிகளின் பயம் ஒருபுறமிருக்க ஆயுதப்படையினரும் அங்கு அடிக்கடி வருவதாகவும் சொல்கிறார்கள். "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது'' என்ற பழமொழி இவர்களின் வாழ்க்கையில் ஒன்றித்துள்ளது.

பிறர் பிள்ளை தலை தடவினால் தன் பிள்ளை தானாக வளரும் என்பர். இவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் துன்பத்தில் நாமும் ஏன் சிறு பங்கு ஏற்கக்கூடாது?

**சி.சந்தானகுமாரன்**

# தமிழகத்தின் எதிர்கால நலனுக்கு தி.மு.கழகத்தினரால் ஆபத்து

## வைகோ தெரிவிப்பு



சென்னை —

தி.மு.க கூட்டணியில் இருந்து நான் விலகியதற்கு முக்கிய காரணமே தமிழ் நாட்டின் எதிர்கால நலன் காக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான். தி.மு.கவால் தமிழக எதிர்கால நலனுக்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என ம.தி.மு.க பொதுச்செயலர் வை.கோ ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள விசேட பேட்டியில் தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

தி.மு.க வெற்றி பெற்றால் அது தமிழ் நாட்டுக்கும், தமிழர்களுக்கும் ஆபத்தாகிவிடும். தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தி.மு.கவினரும், கருணாநிதி குடும்பத்தினரும் முடக்கிவிடுவார்கள்.

மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் குடும்பத்தினர் தான் தொலைக்காட்சி நடத்துகின்றனர். அப்படி இருக்கும் போது அவர் மத்திய அமைச்சரவையில் தகவல் தொடர்பு இலாகாவை வைத்திருப்பது நடைமுறை விதிகளுக்கு எதிரானதாகும். மத்திய அரசுடனான இத்தகைய தொடர்பினால் அவர்கள் எல்லா ஆதாயத்தையும் பெறுகின்றனர்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நான் 4தடவை ஆலோசனை நடத்தினேன். மத்தியஅரசு உண்மையிலேயே ஜனநாயகத்தை காப்பாற்ற விரும்பினால், குறிப்பிட்ட தொழிலை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்களுக்கு அதே தொழில் சம்மந்தப்பட்ட இலாகாக்களை கொடுக்கக்கூடாது.

தமிழகத்தில் கருணாநிதி குடும்பத்தினர் அக்டோபஸ் மாதிரி பரவி வருகிறார்கள். அவர்கள் மற்ற தொழில்களிலும் நுழையக்கூடும். ஏற்கனவே ஆசிய அளவில் கருணாநிதி குடும்பத்தினர் தான் பெரும்பணக்காரர்களாக உள்ளனர்.

தி.மு.க தலைவர் தன் கட்சியையும், மத்திய அமைச்சர்களையும் தன் குடும்ப நலனுக்காக மட்டுமே பயன்படுத்துகிறார். நான் அப்படி அல்ல. என் கட்சியை விட தேசநலனே முக்கியம் என்று நினைக்கிறேன்.

என்னையும், என் கட்சியையும் அழித்து விடவேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டனர். இதனால்தான் நான் தி.மு.க கூட்டணியை விட்டு விலகினேன்.

எத்தனையோ கொடுமையான சம்பவங்களை நான் தாங்கிக்கொண்டேன். தி.மு.கவினர் என்னை அவமானப்படுத்தியபோதுகூட பொறுத்துக்கொண்டேன். ஆனால் தி.மு.க வெற்றி பெற்றால் அது ஒட்டு மொத்த தமிழ் நாட்டுக்கே அழிவை தந்து விடும் என்ற நிலை ஏற்பட்டதால் தான் நான் அவர்களிடமிருந்து விலகி வந்துள்ளேன்.

தி.மு.கவின் குடும்ப தொலைக்காட்சியும், தி.மு.க தலைமையும் என்னை அவமரியாதை செய்வதற்கு எத்தனையோ உதாரணங்கள் என்னால் சொல்ல முடியும். நான் வேலூர் சிறையிலிருந்து வெளியில் வந்து முதன் முதலாக பேட்டி கொடுத்த போது 142 பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர். ஆனால் அந்த தொலைக்காட்சி வேண்டும் என்றே என்னை இருட்டடிப்பு செய்தது.

அது போல் 2 மாதம் நான் நடை பயணம் வந்தபோது திட்டமிட்டு என் செய்தி வராமல் பார்த்துக்கொண்டனர். கொட்டும் மழையில் நான் நடந்தேன். ஆனால், அந்த தொலைக்காட்சியில் வேண்டும் என்றே எனக்கு எதிராக பொய்யான செய்தியை ஒளிபரப்பினார்கள்.

தி.மு.க தலைமை செய்த அவமரியாதைகளை பொறுத்துக் கொண்டு தி.மு.கவுடன் உறவு வைத்தது ஏன் என்று பலரும் கேட்கலாம்.

அதற்கு காரணம் என்னிடம் உள்ள 2 பலவீனங்கள் தான். ஒன்று எனக்கு எதிராக யார் என்ன தீமை செய்தாலும் எளிதில் நான் மறந்து விடுவேன். மற்றவர்கள் செய்யும் சிறு உதவியை கூட நான் மறப்பதில்லை. அதனால் தான் இவ்வளவு நடந்தும் கூட கருணாநிதியை நான் வெறுக்கவில்லை. அவர் மீது எனக்குள்ள பற்று, பாசம் இன்னும் குறையவில்லை. இதுதான் என் பலவீனம்.

1993 ஆம் ஆண்டு என் மீது கொலைப்பழி சுமத்தி கட்சியிலிருந்து வெளியேற்றினார்கள். 30ஆண்டுகளாக கட்சிக்கு உழைத்த எனக்கு செய்யப்பட்டபெரிய துரோகம் இது. தி.மு.கவில் நான் இருந்தபோது எந்த போராட்டமும் நான் இல்லாமல் நடந்ததில்லை.

23தடவை தி.மு.கவுக்காக சிறை சென்று இருக்கிறேன். ஒரு தடவை கூட நான் எம்.பி என்ற அந்தஸ்தை பயன்படுத்தி சிறையில் சொகுசாக இருந்ததில்லை.

'சி' வகுப்பில் என் தொண்டர்களோடு ஒருவனாகத் தான் இருந்தேன். அதனால் தான் அவர்கள் என்னைத் தங்களில் ஒருவனாக நினைத்தனர்.

தி.மு.கவில் எனக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு உயர்வதை கண்ட கருணாநிதி பயப்பட்டார். ஸ்டாலினுக்கு மகுடம் சூட்ட ஆசைப்படும் அவர், நான் அதற்கு போட்டியாக வந்துவிடுவேன் என்று நினைத்தார். அதனால் தான் திட்டமிட்டு என்னை வெளியில் தள்ளி விட்டார்.

ஆனால், அ.தி.மு.கவில் என்னை மரியாதையாக நடத்துகின்றனர். அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்ததால் லட்சக்கணக்கான ம.தி.மு.கவினர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அ.தி.மு.க - ம.தி.மு.க கூட்டணிக்கு தமிழ் நாட்டில் மட்டுமன்றி உலகம் முழுவதும் தமிழர்களிடமிருந்து வரவேற்பும் ஆதரவும் கிடைத்துள்ளது.

எங்கள் கூட்டணியை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ் நாட்டில் இப்போது முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக மௌன அலை வீசுகிறது. ஜெயலலிதா மீண்டும் ஆட்சி பொறுப்பை ஏற்கவேண்டும் என்று தமிழக மக்கள் விரும்புகின்றனர்.

இயற்கை பேரழிவுகளை அவர் எதிர் கொண்ட விதத்தை பார்த்த மக்கள் ஜெயலலிதா நல்ல நிர்வாகத்தை கொடுப்பார் என்று நம்புகிறார்கள். எனவே நிச்சயம் தமிழ்நாட்டில் மீண்டும் அ.தி.மு.க வின் பொற்கால ஆட்சி மலரும்.

எம்.ஜி.ஆர்- மதிய உணவுத்திட்டத்தின் மூலம் ஏழைமக்களின் இதயங்களில் வாழ்ந்தார். அது போல முதலமைச்சர் ஜெயலலிதாவும் ஏழைகளுக்கு இலவச சைக்கிள் கொடுத்து எல்லோர் உள்ளங்களிலும் நீங்காத அளவுக்கு குடிகொண்டுள்ளார்.

எல்லா தரப்பு மக்களுக்கும் ஜெயலலிதா மேம்பாட்டு திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். அவர் மீண்டும் முதல்வர் ஆவதை யாராலும் தடுக்க இயலாது. இவ்வாறு வை.கோ கூறினார்.

# சோனியாவின் பதவி விலகல் தியாகம் தேர்தலில் வாக்குகளாக மாறும்

## கிருஷ்ணசாமி தெரிவிப்பு



சென்னை —

சோனியா தனது எம்.பி . பதவியை ராஜினாமா செய்த தியாகம் தேர்தலில் வாக்குகளாக மாறும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி கூறினார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா தனது எம். பி. பதவியை ராஜினாமா செய்ததைத்தொடர்ந்து சத்தியமூர்த்தி பவனில் தமிழக காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் எம்.பிக்கள், எம். எல். ஏக்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் கூடியது.

கூட்டம் முடிந்ததும் கிருஷ்ணசாமி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் -

சோனியாவின் ராஜினாமா இந்தியாவையே அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. நாட்டின் வளர்ச்சியும், உயர்வும்தான் அவரது குறிக்கோளாக இருந்தது. பிரதமர் பதவியை வேண்டாமென்று மறுத்தவர். அவரது தியாக வாழ்க்கைக்கு இன்னொரு மைல்கல்லாக இந்த ராஜினாமா அமைந்துள்ளது.

தேசிய ஆலோசனைக்குழுத் தலைவராக சோனியா இரண்டு ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி, நாட்டுமக்களிடம் நற்பெயர் எடுத்துள்ளார். இந்தப்பதவி வெறும் ஆலோசனைதரும் பதவிதான். பணம்பெறும் பதவியல்ல. தேர்தலில் இது வாக்குகளாகப் பிரதிபலிக்கும். இதனால் அனைத் துத் தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றிபெறுமென கிருஷ்ணசாமி கூறினார்.

# சோனியாவின் பதவி விலகல்மூலம் மற்றொரு நாடகம் அரங்கேற்றம்

## ஜெயலலிதா கடும் தாக்குதல்



சென்னை —

நாட்டை முட்டாளாக்கும் முயற்சி யில் தனது பதவியை ராஜினாமா செய்து சோனியா மற்றொரு நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். இந்த விடயத்தில் மத்திய அரசின் நடவடிக்கைகள் முழுவதையும் ஜனாதிபதி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா கடுமையாக விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் சோனியாவை கடுமையாக விமர்சித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் -

சோனியா தனது பதவியை ராஜினாமா செய்திருப்பதும், வழக்கம்போல தியாகம் செய்ததாக பேசிக் கொள்வதும் எடுபடப் போவதில்லை. அவரது பதவி பறிக்கப்பட்டுவிடும் என்ற கட்டாய நிர்ப்பந்தத்தில் இருந்து விடுவித்துக் கொள்ளவே சோனியா முயன்றுள்ளார். பயன் தரும் உயர் பதவியை அவர் வகித்துவந்ததால் ராஜினாமா செய்வதை தவிர வேறு வழி அவருக்கு இல்லை என்பதே உண்மை.

கடந்த 2004 ஆம் ஆண்டு இதேபோன்று மிகப் பெரிய தியாகம் செய்வதாக நாட்டை நம்ப வைத்து மத்திய அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க தேசிய ஆலோசனைக் குழு தலைவர் பதவியில் சோனியா அமர்ந்தார். தற்போது, உயர் கொள்கைகளை நிலைநாட்ட ராஜினாமாச் செய்வதாக மீண்டும் மற்றொரு நாடகத்தையாடி, நாட்டை முட்டாளாக்க முயற்சித்துள்ளார்.

சோனியா 2004 ஆம் ஆண்டிலும் தன்னை பிரதமர் பதவிக்கான வேட்பாளராகவே முன்னிறுத்தி, கூட்டணி கட்சித் தலைவர்களிடம் அதற்கான ஒப்புதல்களை எழுத்து பூர்வமாகப் பெற்றார். அதைத்தொடர்ந்து காங்கிரசும், நாடாளுமன்ற கட்சித் தலைவராக சோனியாவை தேர்ந்தெடுத்தது. அதன்பின், திரைமறைவில் நடந்த சம்பவங்களை மறைப்பதற்காக, தியாகம் செய்வது போன்ற மிகப்பிரமாண்டமான நாடகத்தை சோனியா நடத்தி, மன்மோகன் சிங்கிடம் பதவியை ஒப்படைத்தார். இன்றைக்கு மீண்டும் அதே காட்சியை காண்கிறோம்.

இதில் மிகவும் வேடிக்கையானது என்னவென்றால், பழிவாங்கும் நோக்கத்துடன் ஜெயாபச்சனின் பதவியைப் பறிக்க, சோனியா போட்ட திட்டத்துக்கு அவரே இன்று பலியாகி இருப்பது தான். இந்த சூழ்நிலையில் தனக்கு பழக்கப்பட்ட தியாக நாடகத்தை நடத்துவதைவிட அவரால் வேறு என்ன செய்யமுடியும்?

சோனியாவை பாதுகாக்க நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு, பாரம்பரியமாக பாதுகாக்கப் பட்டுவந்த மரபுகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

சோனியா சில நாட்களுக்கு முன்பே ராஜினாமா செய்திருந்தால், நாடாளுமன்றம் பாதியில் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிரா்து.

எம்.பி பதவியையும், தேசிய ஆலோசனைக் குழுத் தலைவர் பதவியையும் சோனியா ராஜினாமா செய்துள்ள போதிலும் இன்னும் பல சக்தி வாய்ந்த தலைவர் பதவிகளை அவர் வகித்து வருகிறார்.

இந்த விடயத்தில் இடதுசாரிகளும் மாட்டிக் கொண்டுள்ளனர். அவர்கள் எப்பொழுதுமே பொது வாழ்க்கையில் நேர்மைபற்றி அடுத்தவர்களுக்குதான் அறிவுரை கூறுவர். கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் உடனடியாக பதவிகளை ராஜினாமா செய்வதுடன், தாங்கள் வகிக்கும் பலன்பெறும் பதவிகளையும் ராஜினாமா செய்ய வேண்டும். மத்திய அரசின் ஒட்டு மொத்த நடவடிக்கைகளையும் ஜனாதிபதி ஆராய வேண்டுமென ஜெயலலிதா வலியுறுத்தினார்.

# உலக அரங்கில்



பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற், 15 புதிய கர்தினால்களை நியமித்துள்ளார்.

வத்திக்கான் நகரில் சென்பீற்றர்ஸ் சதுக்கத்தில் நடந்த சிறப்புப்பிரார்த்தனைக் கூட்டத்தில் பாப்பரசருடன் இந்தப்புதிய கர்தினால்கள் கலந்துகொண்டனர்.

கடந்த ஆண்டு மறைந்த பாப்பரசர் ஜோன் போலுக்கு நினைவு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

## பெனாசிர், நவாஸ்ஷெரீப் பாகிஸ்தான் வரவுள்ளனர்

இஸ்லாமபாத் —

பாகிஸ்தானில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் மீண்டும் போட்டியிடவுள்ள ஜனாதிபதி முஷாரப்பை தோல்வியுறச் செய்யும் வகையில் முன்னாள் பிரதமர்களான பெனாசிர் பூட்டோ மற்றும் நவாஸ்ஷெரீப் இருவரும் பாகிஸ்தானுக்கு திரும்பவுள்ளனர்.

இது தொடர்பாக தற்போது டுபாயில் இருக்கும் பெனாசிரும் சவுதியிலுள்ள நவாஸ் ஷெரீப்பும் விரைவில் நேரடியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். பெனாசீர் பூட்டோ பாகிஸ்தான் திரும்பினால் அவரை உடனடியாகவே கைது செய்வதற்கு முஷாரப்பின் அரசு திட்டமிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## உளவுத் தகவல்களை ரஷ்யா வழங்கியதாம்




வோஷிங்டன் —

கடந்த 2003 ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா படையெடுக்கவுள்ளமை குறித்த உளவுத்தகவல்களை ரஷ்யா ஈராக்குக்கு வழங்கியதாக பென்ரகன் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல்கள் ஈராக்கிலுள்ள ரஷ்ய தூதுவர் மூலமாக வழங்கப்பட்டதாகவும் பென்ரகன் தெரிவித்துள்ளது. எனினும் பென்ரகனின் இந்தத் தகவல் தொடர்பாக ரஷ்யா எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

## மதம் மாறியவருக்கான மரணதண்டனை ரத்து




காபூல் —

ஆப்கானில் கிறிஸ்தவராக மதம் மாறிய இஸ்லாமியர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்பிலிருந்து அவர் விடுவிக்கப்படவுள்ளதாக ஆப்கான் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ், அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹவார்ட் உட்பட உலகின் முக்கிய தலைவர்கள் ஆப்கான் அரசுக்கு கொடுத்த கடும் அழுத்தத்தை அடுத்தே இவர் விடுதலை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கருணா இந்தியாவுக்கு தப்பினார் என்கிறது கொழும்பு பத்திரிகை!

கொழும்பு—

புலிகள் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட கருணா 2005ஆம் ஆண்டே இந்தியாவுக்கு தப்பியோடிவிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கருணா குழுவின்செயற்பாடு மற்றும் ஆயுதக்களைவு தொடர்பாக விடுதலைப்புலிகளும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்கத் தொடங்கிய நிலையில் திடீரென இந்தச் செய்தியை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கருணாவின் குழுக்களால் பயண முகவர் நிலையம் ஒன்றினூடாகவே இந்திய தூதரகத்தில் விசாவுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. வழமையான பயணிகளைப் போன்று கருணா பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையத்தினூடாகவே இந்தியாவுக்கு சென்றிருந்தார்.

கருணா இந்தியாவுக்கு சென்று மூன்று தினங்களின் பின்னர் அவரது மனைவி இந்தியாவுக்கு செல்வதற்கு தனியாக விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார். எனினும் அவரின் விசா விண்ணப்பத்தை தடுத்துவைத்த அதிகாரிகள் அதனை நிராகரித்திருந்தனர்.

அவரது விசா நிராகரிக்கப் பட்டதையடுத்து கருணா இந்தியாவுக்குச் செல்ல அவருக்கு விசா வழங்கியது தொடர்பாக கருணாவின் சகாக்களுக்கும், தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என விசாரணைகள் நடைபெற்றன.

கருணா இந்திய விசா பெற்று இந்தியாவுக்குச் சென்றுள்ளார் என்றும் இது தொடர்பாக தூதரக மட்டத்தில் உள்ளக விசாரணைகள் நடைபெற்றதென்றும் இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கு சென்ற கருணா அங்கிருந்து சிங்கப்பூருக்கு சென்று தனது மனைவியுடன் இணைந்து கொண்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

தற்போதைய ஜனாதிபதி, கருணா இந்தியாவுக்கு தப்பிச் சென்ற சமயம் பிரதமராக இருந்தார். எனினும் கருணா எங்கிருக்கிறார் என்பது பற்றி அவருக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அரசாங்கத்தை கருணா விடுதலைப்புலிகளிடம் இருந்து பாதுகாக்க ஊடகங்கள் மூலம் முயற்சிகள் எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பி மீது தாக்குதல் காலி எம்.பி படுகாயம்

## ஆளும் கூட்டணிக்குள் முரண்பாடு வலுக்கிறது



கொழும்பு—

காலி - மாத்தளைகம என்ற இடத்தில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலகரத்ன விதானாராய்ச்சி கடுமையான காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து அவர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது ஆதரவாளர்கள் மீது நேற்று அதிகாலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதலைக் கண்டித்து பிற்பகலில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களாலேயே நடத்தப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் காலி நகர அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடந்தசனிக்கிழமை அனுராதபுரத்திலும் ஜே.வி.பியினர் மீது சுதந்திரக் கட்சியினர் தாக்குதல் நடத்தியதால் ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

# படையினரின் காவலரண்மீது புலிகள் தாக்குதலாம்!

## படைத்தரப்புக் கூறுகிறது

திருகோணமலை

திருகோணமலை-சேருநுவரவில் அமைந்துள்ள கரட்பொயின்ட் காவல் அரண் மீது நேற்று பிற்பகல் 2.30மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

சிறிய ஆயுதங்கள் மூலம் நடத்தப்பட்ட இந்தத்தாக்குதலின் போது படையினர் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை என்றும் இந்தத்தாக்குதல் தமிழீழ விடுதலைப்புலிகளின் பூநகர் காவலரணில் இருந்தே நடத்தப்பட்டதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

எனினும் இராணுவத்தரப்பின் குற்றச்சாட்டை தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் மறுத்துள்ளார். (04)

# கண்காணிப்புக் குழு...

களை எடுத்துச் செல்லும் குழுக்களும் கிடையாது. ஆகவே, யாராவது ஆயுதங்களுடன் சென்றால், பாதுகாப்புப் படையினர் கைது செய்கின்றனர். இங்கு முகாம்கள் எதுவும் இல்லை. அப்படியிருந்தால் அவர்கள் காட்டட் டும். அவர்கள் விரும்பினால் அந்த முகாம்களைப் பார்வையிடலாம்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா குழுவின் முகாம்கள் எதுவும் இல்லை. இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு இந்த இட்ங்களில் சோதனைகளை மேற்கொண்டோம். அப்போது கிழக்கிலும் சரி, வடக்கிலும் சரி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முகாம்கள் எதுவும் எங்கள் கவனத்துக்கு வரவில்லை.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவால் கொடுக்கப்பட்ட அந்த அறிக்கை மார்ச் 2005இல் கொடுக்கப்பட்ட அறிக்கையாக இருந்தால், இப்போது ஓராண்டாகிவிட்டது. ஆனால், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா குழு முகாம்கள் இருக்கின்றது என்பதை நான் முழுமையாக மறுக்கின்றேன்.

பாதுகாப்பு படையினர் சமாதானத்தைத்தான் விரும்புகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆத்திரமூட்டும் சம்பவங்களை...

கடந்த இரு வாரங்களில் மிக மோசமான வன்முறைகள் நிகழ ஆரம்பித்துள்ள இந்நிலை மிகவும் கவலை ஏற்படுத்துவதாக உள்ளது.

இருதரப்பும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாக்கும் பொறுப்பு இருப்பதாகக் காண்பிக்கின்றன. எனினும், அவர்களின் செயற்பாடுகள் கோபத்தைத் தூண்டும் வகையில் இருப்பதுடன், யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பலப்படுத்துவதாக அமையவில்லை.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்துடன் தங்களுக்கு எதுவித தொடர்பும் இல்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்து இதுவரையிலான தங்களின் அனுபவத்திற்கமைய இந்தச் சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதுவித தொடர்பும் இல்லையென இப்போதே கூறமுடியாதுள்ளது.

அதேநேரம் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படாவிட்டால், ஏப்ரலில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் எதுவித முன்னேற்றமும் ஏற்படாதென்றும், ஜெனிவா பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்படலாமென்றும் விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

தங்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் இருக்காது என்பதை உறுதி செய்வதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

தங்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து அதிக கவனம் செலுத்துமாறு தாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துவதாக கூறியுள்ள கண்காணிப்புக்குழு-தங்களுக்குத் தெரிந்த வகையில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் உள்ளதென்றும் அரசாங்கம் இவற்றைப் பார்க்காது கண்மூடிக்கொண்டிருக்கமுடியாது.

இருசாராரும் பொறுப்புடன் நடந்துகொள்ளாதுவிடின் கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இடம்பெற்றது போன்று வன்முறைகள் நிகழலாமெனத் தாங்கள் அஞ்சுவதாகவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

# முஸ்லிம்...

லிம்களைப் பாதுகா[illegible]காக என்ற பெயரில் இந்த முஸ்லீம் படைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கொண்டை வெட்டுவான் இராணுவ முகாமில் படைப்பிரிவுக்கான ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக இயங்கவிருக்கும் இந்த முஸ்லிம் பிரிவு - இலங்கை இராணுவத்தின் இலகு காலாற்படைப் பிரிவில் இணைக்கப்படும்.

இலங்கையில் இனரீதியான படைப் பிரிவு ஒன்றை இராணுவம் அமைப்பது இதுவே முதற்தடவையாகும். இராணுவத்தில் இனவிகிதாசார அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறாவிட்டாலும் இலங்கை இராணுவத்தில் பெரும்பாலானோர் சிங்களவர்களாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

# மாணவர்கள்...

பாடசாலை, உயர்கல்வி நிறுவனம், தனியார் கல்வி நிறுவனம் ஆகியவற்றின் செயற்பாடுகளை இடைநிறுத்தி மாணவர் சமுகத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்துமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை பகிஷ்கரிப்பதற்கு யாழ்.மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் அமையம், உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் மாணவர் ஒன்றியம் என்பன ஆதரவு தெரிவித்துள்ளன.

# தேர்தலுக்கு...

பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் என்று முன்னதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதேவேளை கடந்த சில நாட்களாக சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுவிட்டதாக வதந்திகளும் உலாவருவது குறிப்பிடத்தக்கது.

# சமாதான முயற்சி...

அனுபவம் நோர்வேக்கு உண்டென்றும், காலத்துக்குக் காலம் பல இடங்களில் இவ்வாறு எதிர்ப்புக்களை எதிர்கொண்டே தமது முயற்சிகளைத் தொடர்ந்ததாகவும் கூறியுள்ளன.

இலங்கையின் அமைதி முயற்சியில் நோர்வே அர்ப்பணிப்புடனேயே செயற்படுவதாகவும், இந்த இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரண்டு பிரதான தரப்புக்களான அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தங்களை இந்த அமைதி முயற்சியிலிருந்து வெளியேற்றும்படி கோரிக்கை விடும்வரை தங்களது பணி தொடரும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை வழங்குவதற்கு சர்வதேச சமூகத்தின் பரந்துபட்ட ஆதரவு இருப்பதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சரும், விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். இதேவேளை, அமெரிக்கா சிங்களச் சார்பு நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகத் தோன்றுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா - மன்னாரில் இரண்டு நாட்கள் ஹர்த்தால்!

வவுனியா—

வவுனியா-மன்னார் ஆகிய இரு மாவட்டங்களில் நாளையும் நாளை மறுநாளும் இரு நாள் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அங்குள்ள பொது அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

வவுனியாவில் கடந்த வாரம் பொதுமக்களின் வீடுஒன்றில் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் மற்றும் வர்த்தகர்கள் மீதான தாக்குதல் சம்பவம் என்பனவற்றை கண்டித்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தவிர்ப்பதற்கு சம்மந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் இந்த பகிஷ்கரிப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்லும் புளியங்குளம் மற்றும் உயிலங்குளம் ஆகிய வீதிகள் ஊடாக போக்குவரத்தும் இடைநிறுத்தப்படும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார் (3)(மோ)

## வர்த்தகர் படுகொலை தொடர்பாக

# 3 இராணுவ பொறுப்பதிகாரிகளை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

வவுனியா—

வவுனியா மாவட்டத்தில் உள்ள மூன்று இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரிகளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா சாஸ்த்திரி கூழாங்குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தகர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் இராணுவத்தினருக்கு தொடர்பு இருப்பதாக நீதிபதியிடம் பொதுமக்கள் முறையிட்டதையடுத்தே இந்த உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது.

கல்மடு, பம்மைமடு, தாண்டிக்குளம் ஆகிய இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரிகளே இன்று வவுனியா நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

# எட்டு தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்பில் கடத்தல்!

## ஆயுதக் குழுவினர் கைவரிசை

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு ஆரையம்பதியில் தமிழ் இளைஞர்கள் எட்டுப்பேரை இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் துணை ஆயுதக் குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளை வானில் வந்த ஆயுதபாணிகள் இந்த இளைஞர்களை வாகனத்தில் கடத்திச் சென்றுள்ளனர். மேற்படி ஆயுதபாணிகளில் ஒருவர் முன்னாள் வரதன் குழுவில் செயற்பட்ட கண்ணதாசன் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேற்படி நபரே இந்த இளைஞர்களை இனங்காட்டிக் கடத்திச் செல்வதற்கு முன்னோடியாகச் செயற்பட்டுள்ளார். உறவினர்கள் கதறி அழுத போது, உங்கள் பிள்ளைகளைப் பயிற்சிக்குக் கொண்டுபோகிறோம், மாதம் பத்தாயிரம் ரூபா சம்பளம் வழங்குவோம். இந்த விடயம் யாருக்கும் தெரியக்கூடாது என மிரட்டியுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களில் ஐந்து பேர் ஆரையம்பதி திருநீற்றுக்கேணியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தால் மட்டக்களப்பு மக்களிடையே அச்சமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

# புத்தம் புதிய டோறா...

கடற்படையினர் கூறிவிட்டு அதை நெருங்க முற்பட்டபோதே - அதில் இருந்தவர்கள் தமது படகை வெடிக்க வைத்தனர்.

இது கடற்படையினர் மீதான ஒரு தாக்குதல் அல்ல என்றும், கடற்படையினர் தமது படகைச் சோதனையிடுவதில் இருந்து தப்பிக் கொள்வதற்காகவே அதிலிருந்தவர்கள் தமது படகை வெடிக்க வைத்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிடுவதில் அவதானமாக இருப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, கடற்படைப்படகு மூழ்கிய சம்பவத்தை கேள்வியுற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உடனடியாக தேர்தல் பிரசாரத்தை நிறுத்திவிட்டு கொழும்பு திரும்பினார்.

எதிர்வரும் 30ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் பிரசாரத்துக்காக தென்பகுதி சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தச் சம்பவத்தை அறிந்ததுமே கொழும்பு திரும்பினார். கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் மாலை சென்ற ஹெலி ஒன்று அவரை ஏற்றி வந்தது.

கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகளுடனும், இராணுவத் தளபதிகளுடனும் இந்தச் சம்பவம் தொடர்பாக கலந்தாலோசனை நடத்தியதுடன் அரசாங்கம் அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்ததாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

# காணாமற்போன...

படகில் இருந்த ஒரு அதிகாரியும் 7 கடற்படையினரும் இறந்திருக்கலாமென்றே கருதப்படுகிறது.

அதேவேளை, கடற்படைப் படகின் கட்டளை அதிகாரியான லெப்.கொமாண்டர் சமிந்த நவரத்னவும், 10 கடற்படையினரும் மீனவர்களால் மீட்கப்பட்டு பத்தலகுண்டு கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டனர்.

அங்கிருந்து ஹெலி மூலம் அவர்கள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இப்பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## பௌதீகவியல்

### (பகுதி -I)

01) பெரும்பாலான மெய்வாயுக்கள் குறித்த வெப்பநிலை, அமுக்க வீச்சுக்களில் பின்வரும் சமன்பாட்டிற்கமைய ஒடுங்கும்
$(p+a/v^2)(v-b)=RT$. இங்கு P,V,R,T, வழமையான கருத்துடையன. a,b என்பன குறித்த வாயு ஒன்றிற்கான சிறப்பியல்பு மாறிகளாகும். a,b இன் அலகுகளைச் சரியாகத் தருக?
1) $Pam^{-6}\ mol^2,\ m^3\ mol^{-1}$ 2) $Pam^6\ mol^{-2},\ m^{-3}\ mol$
3) $Pam^{-6}\ mol^2,\ m^3\ mol^{-1}$ 4) $Pam^6\ mol^{-2},\ m^3\ mol^{-1}$
5) இரு கணியங்களும் அலகற்றவை

02) திருகாணி நுண்மானி ஒன்றினால் உருக்குக்கோளம் ஒன்றின் விட்டத்தினை அளப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.



பூச்சிய வாசிப்பு விட்டத்தின் வாசிப்பு


கோளத்தின் விட்டம்?
1) 3.48 mm 2) 2.04 mm 3) 1.98 mm
4) 1.92 mm 5) 1.42 mm


03) திணிவுடைய மழைத்துளி ஒன்று வளியினூடாக மாறாவேகம் v உடன் நிலைக்குத்தாக புவியீர்ப்பின் கீழ் இயங்குகின்றது. மழைத்துளி அனுபவிக்கும் தடைவிசையானது KV எனின், பின்வரும் தொடர்புகளில் எது மழைத்துளியின் இயக்கப் பண்புச்சக்தியினைத் தரும்?
1) $mg/k$ 2) $mg^2/2k^2$ 3) $m^3g^2/k^2$
4) $m^3g^2/2k^2$ 5) $m^3g^2k^2/2$

04) 4m திணிவுடைய கோளம் a யும், 2 m திணிவுடைய கோளம் B யும் அவற்றின் மையவிணைகோட்டின் வழியே மோதிப்பின்னதைக்கிறது. a,b என்பவற்றின் வேகங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் முறையே
$\nabla$ VA, $\nabla$ VB எனின் $\nabla$ VB/ $\nabla$ VB இனைச்சரியாகத் தருவது?
1) 2 2) 1/ 2 3) 1 4) 1/2 5) $\sqrt{2}$

05) m திணிவுடைய வாகனம் ஒன்றின் எஞ்சின் p வலுவை வழங்கவல்லது. இவ்வாகனம் ஓய்விலிருந்து ஆர்முடுகி v வேகத்தினை அடைவதற்கு எடுக்கக்கூடிய இழிவு நேரம் யாது?
1) $mv/P$ 2) $mv^2/p$ 3) $P/mv$
4) $2p/mv^2$ 5) $mv^2/4p$

06) நேரிய நாடா ஒன்று மாறாக்கோணவேகத்துடன் சுற்றப்படுகிறது. நாடாவின் வேகம் v நேரத்துடன் மாறுபடுவதைச் சரியாகத்தரும் வரைபு?








07) 24 மணித்தியாலங்கள் சுற்றல்காலமுடைய தொடர்பாடல் செய்மதி ஒன்று இரு மடங்கு திணிவுடைய வேறொரு செய்மதி ஒன்றினால் பிரதியிடப்படுகிறது. புதிய செய்மதியும் அதே சுற்றல் காலத்தைக் கொண்டிருப்பின்

$$\frac{\text{புதிய செய்மதியின் ஒழுக்கின் ஆரை}}{\text{பழைய செய்மதியின் ஒழுக்கின் ஆரை}} = ?$$


1) 1/2 2) 1 3) 2 4) 2 5) 1/2

08) இரு சமதிணிவுகள் M ஐ உடைய இரு உருக்கள் மாறாக்கதி v உடன் ஒரே மையத்தையும் R ஆரையுடைய விட்டப்பாதையில் இயங்குகிறது. ஒவ்வொரு உருவிலும் தொழிற்படும் தேறிய விசை?





ஒவ்வொரு உருவிலும் தொழிற்படும் தேறிய விசை
1) $GM^2/4R^2$ 2) $2MV^2/R$ 3) $MV^2/2R$
4) $GM^2/R^2$ 5) பூச்சியம்

09)




R ஆரையும் M திணிவுமுடைய கோள் ஒன்றின் மேற்பரப்பிலிருந்து 2r தூரத்தில் உள்ள புள்ளி P ஆகும்.
புள்ளி P இலிருந்து நிலையான திணிவு ஒன்று விடுவிக்கப்பட்டால் அது கோள் மேற்பரப்பினை மோதும் கதியினைத் தருவது?
1) $(2am/3R)^{1/2}$ 2) $(4am/3R)^{1/2}$ 3) $(2am/R)^{1/2}$
4) $(4am/R)^{1/2}$ 5) $(am/R)^{1/2}$


10) புவியின் மையத்திலிருந்து L.2L தூரத்திலுள்ள புள்ளிகள் X,Y இனை உரு காட்டுகிறது.




புள்ளி X இலுள்ள ஈர்ப்பு அழுத்தம் -8KJkg-1. 1Kg திணிவு புள்ளி X இலிருந்து Y இற்குச் செல்லும் போது அதன் அழுத்தசக்தி அதிகரிப்பு
1)-4KJ 2)-2KJ 3)+2KJ 4)+4KJ 5)+8KJ

11) T வெப்பநிலையில் பேணப்படும் கொள்கலன் ஒன்றினுள் M1, M2 எனும் இரு வெப்பமானிகள் புகுத்தப்படுகிறது. இரு வெப்பமானிகளும் சர்வசமனானதாக இருக்க M1 இன் குமிழ் கருமையாக்கப்பட்டுள்ளது. வெப்பச்சமநிலையில் M1,M2 என்பவற்றின் வாசிப்புக்கள் T1, T2 எனின், பின்வருவனவற்றுள் சரியானது -
1) $T_1>T_2>T$ 2) $T_1>T>T_2$ 3) $T_1=T_2=T$
3) $T_1=T>T_2$ 5) $T_1>T=T_2$

12)





ஒரே குறுக்கு வெட்டும் முறையே 60 cm, 30 cm நீளமுடைய இரு உலோகக்கோல்கள் X,Y என்பன காவல் கட்டிடப்பட்டு காட்டியவாறு தொடுகையில் உள்ளன. திறந்த முனைகள், சந்தி என்பனவற்றின் வெப்பநிலைகளை உரு காட்டுகிறது. X இனது கடத்தாறிற்கும் Y இனது கடத்தாறிற்கும் இடையிலான விகிதம்?
1)1:6 2)2:3 3)25:24 4)3:2 5)6:1

13) கரும் பொருள் ஒன்றின் வெப்பநிலை T1 ஆக உள்ளபோது 1 தூரத்தில் வலுவானது அளவிடப்படுகிறது. பொருளின் வெப்பநிலை T2 ஆக உள்ளபோது தூரம் 2 அதே வலுப்பெறுமானம் பெறப்படுகிறது எனின் $d_2/d_1$ ?
1) $T_2/T_1$ 2) $(T_2/T_1)^2$ 3) $(T_1/T_2)^2$ 4) $(T_2/T_2)^4$ 5) $(T_1/T_2)^4$

14) குறித்த திணிவு வாயு ஒன்றின் கணவளவு ா ஆகும். வாயு மூலக்கூறின் இடைவர்க்க மூலக்கதி இரு மடங்காகுமாறு வெப்பநிலை அதிகரிக்கப்படுகிறது. வாயுவின் அமுக்கம் மாறவில்லை எனக்கொண்டு புதிய கனவளவு?
1) V/2 2) V/2 3) 2V 4) 2V 5) 4V


15) இருவாயுத்தொகுதிகளின் PV எதிர் P வரைபு கீழே தரப்பட்டுள்ளது. முதலாவது சமவெப்பத் தொகுதி 1 இனால் காட்டப்படுகிறது. பின்வருவனவற்றில் சமவெப்பத்தொகுதி 2 இனைப்பெறுவதற்கு




1) வாயுவின் திணிவினை இருமடங்காக்குதல்
2) வெப்பஇயக்கவியல் வெப்பநிலையை இருமடங்காக்குதல்
3) வெப்பஇயக்கவியல் வெப்பநிலையை அரைவாசியாக்குதல்
4) வாயுவின் திணிவு இருமடங்காகவும் வெப்பநிலை அரைவாசியாகவும் இருத்தல்
5) வாயுவின் திணிவும், வெப்பநிலையும் அரைமடங்காக்கப்படும் போது


16) ஓரணு வாயு ஒன்றின் மாறா அமுக்கத் தன்வெப்பக் கொள்ளளவு?
1) R/2 2) 3R/2 3)2R 4)5R/2 5)7R/2

17) இலட்சிய வாயு ஒன்றின் P எதிர் v வரைபு தரப்பட்டுள்ளது.





பினவரும் புள்ளிகளில் வெப்பநிலை குறைவாகவும், அதிகமாகவும் உள்ள புள்ளிகள் முறையே
1) X,Y 2) Y,X 3) Y,Z 4) Z,X 5) Z,Y

18) இடமிருந்து வலமாக நகரும் குறுக்கலை ஒன்றின் கணநிலைப்புள்ளிகளை உரு காட்டுகிறது




1,2,3 புள்ளிகளின் வேகங்களின் திரைகளை சரியாக தருவது முறையே
1) → → → 2) → ← → 3) ↓ ↓ ↓
4) ↑ ↓ ↑ 5) ↓ ↑ ↓

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006




மின்கலம் ஒன்றுடன் 2 Ω தடை ஒன்றுடன் தொடர்நிலையில் இணைக் கப்பட்டுள்ளதை உரு காட்டுகிறது. மின்கலத்தின் முனைகளுக்கு குறுக்கே வோல்ற்று மானி இணைக்கப்பட்டு ஆளி திறந் துள்ள போதும், ஆளி மூடியுள்ள போதும் அவற்றின் வாசிப்புக்கள் முறையே 12V, 8V எனின் மின்கலத் தின் உட்தடை?

1) 2/33Ω 2) 1 Ω 3) U/3 Ω 4) U Ω 5) 6 Ω


20) d விட்டமுடைய வட்ட பிளாஸ்ரிக் தட்டு ஒன்றின் பரிதியின் வழியே n உலோகப்பொட்டுகள் சீரான இடைவெளியில் உள்ளது. ஒவ்வொரு உலோகப்பொட்டும் q ஏற்றத்தைக் கொண்டுள்ளது. இத்தட்டானது அதன் மையத்தினூடாகச் செல்லும் அச்சுப்பற்றி p சுழற்சிகள்/நிமிடம் வீதம் சுழற்றப்படுகிறது. பரிதியின் வழியேயான மின்னோட்டம்?

1) nq/p 2) nq 3) npq
4) npqπ d 5) πdnpq

21) மின்வலு ஒன்றினூடாக மின்னோட்டம் அதன் முனைவுகளுக்கு குறுக்கேயான அழுத்த வேறுபாடு என்பவற்றுடன் மாறுபடுவதை வரைபு காட்டுகிறது.





பின்வரும் வரைபுகளில் மின்கூறின் தடை ஆனது ா உடன் மாறுபடுவதைக் காட்டும் வரைபுகளில் சரியானது?




22)



காட்டியவாறு கடத்தும் கோல் PQ இல் முனை P இன் விட்டம் Q இன் விட்டத்தின் இரு மடங்காகும். PQ ற்கு இடையே அழுத்த வேறுபாடு ஒன்று பிரயோகிக்கப்படின் முனை P இலிருந்து Q ற்கு நகரும் இலத்திரன் சராசரி நகரற்கதி (V) மாறுபடுவதை சரியாகத் தருவது?




23)



அருமக மூன்று தடைகளின் வலைப்பின்னல் தரப்பட்டுள்ளது. Y ற்கும் Z ற்கும் இடையிலான சமவலுத்தடை 2.5 m எனின் X ற்கும் தீ ற்கும் இடையிலான சமவலுத்தடை?

1) 0.21Ω 2) 0.55Ω 3) 1.9 Ω 4) 4.8Ω 5) 6.0Ω


24)



அழுத்தமானி ஒன்று E மின்னியக்கவிசையும் r உட்தடையுமுடைய சேமிப்புக்கலம் ஒன்றுடன் r தடையும் யி நீளமுடைய வழுக்குக்கம்பி AB யுடனும் தொடர்நிலையில் இணைக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. துணைச்சுற்றிலுள்ள கலம் வழுக்கிக் கம்பியின் L/3 நீளத்தினால் சமநிலைப்படுத்தப்படுகிறது எனில் துணைச்சுற்றிலுள்ள கலத்தின் மின்னியக்கவிசை?

1) E/3 2) ER/3(R+r) 3) Er/3(R+2r) 4) ER/3(R+2r) 5) E(R+2r)/3R


25)



சீரான மின்புலம் E உள்ள பிரதேசமொன்றில் சமபக்க முக்கோணியை ஆகுமாறு உள்ள புள்ளிகள் A,b,C ஆகும். AB யின் நீளம் S ஆகும். காட்டியவாறு a→ B →B → C,→ C→A இனூடாக நேரேற்றம் ஒன்று கொண்டு செல்லப்படுகிறது. இப்பாதைகளில் அசையும் ஏற்றத்தில் மின்விசைக்கு எதிராக செய்யப்படும் வேலைகளைச்சரியாகத் தருவது?

| | | |
|---|---|---|
| 1) +ES | +ES cos 60 | -Es Sin 60 |
| 2) 0 | -ES cos 60 | +ES cos 60 |
| 3) +ES | +ES cos 60 | -ES cos 60 |
| 4) 0 | +ES Sin 60 | -ES Sin 60 |
| 5) 0 | - ES Sin 60 | +ES Sin 60 |


26)




ஆரம்பத்தில் ஏற்றம் எதுவுமற்ற 10 μ 20 μ கொள்ளளவிகள் தொடர்நிலையில் இணைக்கப்பட்டு 3KV அழுத்த வேறுபாடு பிரயோகிக்கப்படுகிறது. கொள்ளளவியில் சேமிக்கப்படும் அதியுயர் ஏற்றம்?

1) 4.5x10-3C 2) 20X10-3C 3) 10X10-3C 4) 30X10-3C 5) 15x10-3 C

27) மிகநீண்ட நேரிய சமாந்தரமான கடத்திகள் வெற்றிடமுள்ள தளமொன்றில் வைக்கப்பட்டு, படத்தில் காட்டியவாறான திசைகளில் மின்னைக்காவுகின்றன.




1 a மின்னைக்காவும் சமாந்தர நேரிய கடத்திகள் 10cm இடைத்தூரத்திலுள்ள போது 2X10-6 $Nm^{-1}$ விசை தொழிற்படுகிறது. எனின் கடத்தி Z இன் அலகு நீளத்தில் தொழிற்படும் தேறியவிசை?

1) $3.0 \times 10^{-6}$ $Nm^{-1}$ 2) $3.5 \times 10^{-6}$ $Nm^{-1}$ 3) $4.0 \times 10^{-6}$ $Nm^{-1}$
4) $4.5 \times 10^{-6}$ $Nm^{-1}$ 5) $5.0 \times 10^{-6}$ $Nm^{-1}$


28) L நீளமான ஈர்க்கப்பட்ட இழை ஒன்று அதன்முடிவிடங்கள் இரு நிலையான புள்ளிகளுக்கு இணைக்கப்பட்டுள்ளது. இவ்விழையிலிருந்து பெறக்கூடிய குறுக்கலையின் இழிவு மீடிறன்கள் முறையே $f_1$, $f_2$ ஆகும். பின்வருவனவற்றுள் $f_2/f_1$ குறுக்கலையின் கதி ° என்பவற்றைச் சரியாகத்தருக?

| | $f_2/f_1$ | V |
|---|---|---|
| 1) | 2 | $f_1L$ |
| 2) | 3 | $3 f_1L$ |
| 3) | 2 | $f_2L$ |
| 4) | 0.5 | $f_2L$ |
| 5) | 3 | $f_2L/3$ |


29) 1M நீளமான ஈர்க்கப்பட்ட இழை ஒன்றில் உருவாகும் குறுக்கலையின் அடிப்படை அதிர்வெண் 256Hz. இழை ஆனது 0.4m இனால் குறைக்கப்பட்டு அதே இழுவிசை பேணப்படின் புதிய அடிப்படை மீடிறன்?

1) 102Hz 2) 162Hz 3) 312Hz 4) 416Hz 5) 640Hz


30) எளிய ஊசல் ஒன்றின் அலைவு காலம் 25 ஆகும். t=0 இல் ஊசல் குண்டானது சிறிய தூரம் ஒன்றினால் இடம்பெயர்க்கப்பட்டு விடுவிக்கப்படுகிறது. ஊசல் குண்டினது இயக்கசக்தி ($E_k$), அழுத்தசக்தி(Ep) என்பனவற்றின் நேரத்துடனான மாறல்களைச் சரியாகத்தருவது?



31) குறை கடத்தி ஒன்றின் I-V சிறப்பியல்பினை சரியாகத் தருவது?



32)





X,Y முடிவிடங்கள் நேரோட்ட முதல் ஒன்றிற்கு இணைக்கப்படின் $I_1/I_3$ விகிதத் தினை சரியாகத் தருவது?

1) $\frac{R_3+R_1}{R_1}$ 2) $\frac{R_2+R_1}{R_1}$ 3) $\frac{R_2+R_3}{R_1(R_2+R_3)}$ 4) R1 இல் தங்கியிருப்பதில்லை.

5) நேரோட்ட முதலின் உட்தடையில் தங்கியிருக்கும்.

33) P,Q,R என்பன சமதடைகள் ஆகும். இவை உருவில் காட்டியவாறு புறக்கணிக்கத்தக்க உட்தடை உடைய மின்கலம் ஒன்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. மின்கலம் வழங்கும் வலு 12W எனின் தடை R இல் விரயமாக்கப்படும் வலு?

1) 2W 2) 3W 3) 4W 4) 6W 5) 8W




34) மாற்றுத்தடை R இன் வீச்சு (0-107) ஆகும் எனின் P,Q ற்கிடையே பெறக்கூடிய தடையின் வீச்சு?

1) பூச்சியமும், 10Ω 2) 10Ω, 2ம் $10^4$Ω
3) 10,Ω 10 4) 10Ω, $10^{11}$Ω

V.Partheepan